தர்மசக்கரம்



குரோதன ஞு ஐப்பசி மீ

சக்கரம் 34 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

விளக்கியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

தர்ம சக்கரத்தில் 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்' என்ற தலைப்பில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கட்டுரைகள் யாண்டும் பயன்படக் கூடிய தாக இருப்பதால், அவைகளைத் தொகுத்து 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்' என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம். அம்பிகையின் நாமங்களை பொருள் உணர்ந்து உச்சரிப்பதற்கு இந்நூல் சாதகர்களுக்குப் பயன்படும்.



எல்லாரும் எளிதில் பொருள் உணர்ந்திடும் எளிய இனிய தமிழ் நடை. அழகிய காலிகோ பைண்டு அமைப்பில் டெம்மி 1க்கு 8ல் 576 பக்கங்களை உடையது. ரூ. 40-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தின் பொருட்டு மிகக் குறைந்த

விலை ரூ. 2க்கு விற்கப்படுகிறது.

(தபால் செலவு ரூ. 4-00)

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை 639 115 :: திருச்சி ஜில்லா.

குத உமிழ்ம்மணை
19.10

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34 | குரோதன ஹு ஐப்பசி மீ | ஆரம் 10

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லே. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதை யும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினேந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 **வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00**

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 **வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00**

அந்தர்யோக விவரங்கள்

காமராஜ் மாவட்டம்—அருப்புக்கோட்டையில் 20—10—85 ஞாயிறு

இடம்: ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகை அம்மன் கோவில் தேவஸ்தான மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—வடக்கம்பட்டியில் 27—10—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்தி மஹால்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 27—10—85 ஞாயிறு

இடம்: திருமுருகன் நர்சரி பள்ளி, கடலையூர் ரோடு.
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலத்தில் 3—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ள
[லாம்.

பெங்களூரில் 3—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கன்டோன்மென்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள்
மடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கரூரில் 3—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதீஸ்வரர் கோவில்
நேரம்: மாலை 6-00 மணி முதல் 8-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்திற்கு அடுத்த குண்டலப்பட்டியில்
4—11—85 திங்கட்கிழமை

இடம்: அரசு நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 17—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 | குரோதன ௵ ஐப்பசி ௴ | ஆரம் 10

பிரார்த்தனை

बालस्तावत्क्रीडासक्तस्तरुणस्तावत्तरुणीरक्तः ।
वृद्धस्तावच्चिन्तामग्नः परमे ब्रह्मणि कोऽपिनलग्नः ॥

भजगोविन्दं ॥ — शंकराचार्य

பாலஸ்தாவத் கிரீடாஸக்தஸ் தருணஸ்தாவத் தருணீரக்த: ।
வ்ருத்தஸ்தாவச் சிந்தாமக்ன: பரமே ப்ரஹ்மணிகோऽபிநலக்ந: ॥

பஜகோவிந்தம் ॥ — ஆதிசங்கரர்

குழந்தை உள்ளம் விளையாட்டிலும், வாலிபன் உள்ளம் சிற்றின்பத்திலும், முதியோன் உள்ளம் கவலையிலும் மூழ்கிக்கிடக்கிறது. பரமனிடத்தில் மனதைச் செலுத்துவார் யாருமில்லை. மனமே! கோவிந்தனை வழிபடுவாயாக.

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணி தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை யறிந்தேன்
அஞ்சி னேன் நமனுரவர் தம்மை
உரைப்பன் நானுன் சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறியாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை அருளாய்
இடை மருதுறை எந்தை பிரானே. — சுந்தரர்

அருள் விருந்து

வாழ்வாங்கு வாழ்பவனுக்கு வாழ்வு முழுதும் இன்பகரமானதே.

கஷ்டத்தில் உழல்பவர்களுக்கே மன்னிப்பின் மகிமை விளங்குகிறது.

ஞானிக்கு இவ்வுலகம் தனக்குத் தானே சிருஷ்டித்துக்கொண்டதாம்.

அருள் நாட்டக் கண்ணீர் கண்ணீரற்ற பெருநிலையின்கண் எடுத்துச் செல்கிறது.

சுத்தமனம் உடையவனுக்கே பிறரிடம் தூய அன்பு செலுத்துவது சாத்தியமாகிறது.

போகம் மனிதனைப் பாழ்படுத்துகிறது. அதற்கு நேர்மாருக யோகம் அவனைக் கை தூக்குகிறது.

உயிர்களுக்குப் பணிவிடை செய்பவனே இறைவனுடைய சாந்நித்தியத்தைத் தன் உள்ளத்தினுள் உணருகிருன்.

காரணமின்றித் தண்டிப்பவனும், நல்லாரைத் துன்புறுத்துபவனும் அதிவிரைவில் தானே துன்பத்திற்கு ஆளாவான்.

தூய உள்ளம் படைத்திருப்பவனே கடவுளுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு உலகுக்குத் தீங்கு ஏதும் செய்யமாட்டான்.

யார் ஒருவன் ஆசைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு அமைதியாக இருக்கின்ருனே அவனுக்கே பரஞானம் வந்து வாய்க்கிறது.

பக்தன் ஒருவனே மனிதனுடைய மிரட்டுதலுக்கு அஞ்சமாட்டான். கேடுகளனைத்தையும் பக்தனே மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிருன்.

பெரும்பாலும் மனிதன் செய்வது இன்னதென்று தெரியாது திணறிக் கொண்டிருக்கிறபொழுதுதான் இறைவன் அருள் அவனுக்குக் கிட்டுகிறது.

கெட்ட எண்ணங்களையெல்லாம் உள்ளத்தைவிட்டு ஒதுக்கி விடு. தூய நல்ல எண்ணத்தில் நிலைத்திரு. பிறகு உன் மனதைக் கட்டியாள உனக்கு இயலுகிறது.

நல்லான் ஒருவன் சமுதாயத் திட்டங்களை மகிழ்வுடன் நிறைவேற்றுகிருன். மேலும் அன்னவனே சமுதாயத்தில் தென்படுகின்ற தீமைகளைத் தீவிரமாக எதிர்க்கிருன்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவரும், பக்தர்களும் பரம்பொருளைப் பற்றி உரையாடிக்கொண்டிருக்கின்றனர். கரைகாணாக் கடலினுள் இங்குமங்கும் மலைமலையாக உறைபனிக் கட்டிகள் குளிரின் விளைவாக உண்டாகியிருக்கின்றன. அதே பாங்கில் பக்தனுடைய அன்பில் கட்டுண்டவனாகப் பரவஸ்துவானது வடிவுடன் தோன்றிப் பக்தன் விரும்புகின்ற உபாசன மூர்த்தியாகக் காட்சி கொடுக்கிறது. மறுபடியும் சூரிய உதயம் உண்டாகிறபொழுது உறைபனிக்கட்டியானது தான் எடுத்துள்ள வடிவங்களையெல்லாம் அகண்டாகாரமாய் எங்கும் வியாபித்துள்ள நீரினுள் இழக்கின்றது. அதே விதத்தில் பரவஸ்துவானது ஞான ஒளிக்கு உட்பட்டுத் தான் எடுத்துள்ள வடிவத்தை இழந்து விடுகிறது.

சாதகன் ஒருவன் அஹம் பிரம்மாஸ்மி என்று இயம்பிக் கொண்டிருக்கின்றான். அப்படி இயம்பும் பரியந்தம் அவனுடைய செயலுக்குத் துணை புரிவது மனது. இந்த மனதைக் கையாண்டு கொண்டிருக்கும் பரியந்தம் ஆத்மசாதகன் பிரம்ம ஞானம் அடையமாட்டான். அங்ஙனம் அவன் தன் மனதை விசாரத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பரியந்தம் பிரபஞ்சமும் அவனுடைய காட்சியில் இருந்து கொண்டிருக்கிறது. அதை அவன் தன்னுடைய இந்திரியங்கள் வாயிலாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பரியந்தம் நாவுக்கு இனிய பொருளாகவும், காட்சிக்கு அழகு நிறைந்ததாகவும், ஸ்பரிசம் அல்லது தொட்டு உணர்தல் என்னும் செயலின் வாயிலாக அப்பொருள் இன்பதுன்பங்களை உண்டுபண்ண வல்லதாகவும், ஒளியின் வாயிலாகத் தன்னுடைய இயல்புகளைச் சாதகனுக்கு எடுத்துக் காட்டும் பாங்குடையதாகவும் அவனுடைய கிராணேந்திரிய வாயிலாக மணம் நிறைந்ததாகவும் அது காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இக்கோட்பாட்டைச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்தின் வகை தெரிவாக உலகம் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது என்று திருக்குறள் கூறுகிறது. இச்செயல்கள் யாவுக்கும் காரணமாயுள்ள மனது ஒடுங்குமாகில் சாதகன் நிர்விகல்ப சமாதியை அடையப் பெறுபவன் ஆகிறான். ஆத்மாவானது மனதின் வாயிலாக அடையப்பெறுவது அன்று. மனதை ஒதுக்கி விட்டால் ஆத்மாவே எஞ்சியிருக்கின்றது. அத்தகைய ஆத்மாவைக் கொண்டு பரம்பொருள் அடையப் பெறுகின்றது. விகாரமற்ற சுத்தமனதும், உபாதிகளற்ற புத்தியும், ஆத்மாவும் ஒன்றேயாம்.

ஒரு பொருளைக் காணுதல் பொருட்டு என்னென்ன உபகரணங்கள் தேவையாயிருக்கின்றன என்பதை ஒரு சிறிது எண்ணிப்பார். கண்கள் உனக்குத் தேவை. ஆனால் அமாவாசை இருட்டில் அக்கண்கள் உனக்குப் பயன்படமாட்டா. வெளிச்சம் தேவை. இவையிரண்டும் புறக்கரணங்கள். இவை யாவுக்கும் மேலாக ஒரு பொருளை நுகர்தற்பொருட்டு மனது என்னும் அந்தக்கரணம் முற்றிலும் அவசியமாயிருக்கிறது. புறக்கரணங்கள், அகக்கரணம் ஆகிய இம்மூன்றனுள் ஏதேனும் ஒன்று இல்லாது போய்விட்டாலும் அல்லது பயன்படாது போய்விட்டாலும் புறவுலகைக் காண உனக்கு இயலாது. இத்தகைய அந்தக் கரணத்தை ஆழ்ந்து பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் பரியந்தம் இவ்வுலகின் காட்சியை மீண்டு மேலே போக உனக்கு இயலாது. இத்தகைய உலகைக் காணும் வல்லமை 'நான்' அல்லது அகங்காரத்தின் செயலாம். 'நான்' என்னும் அகங்காரத்தின் செயல் இருக்கும் பரியந்தம் இவ்வுலகும் ஒருவனுக்கு உண்மையாம்.

இம்மனதானது பொருள்களை நுகரும் பான்மையைவிட்டொழிக்குமாகில் ஆத்ம சாதகனுக்குச் சமாதிநிலை கூடுகிறது. அந்நிலையில் அவன் பிரம்ம ஞானியாகிறான். சுராவளியில் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்கள் இருப்பது உனக்குத் தெரியும். பாடுகிற ஒருவன் 'நீ' என்னும் சுரத்திலே நெடிது இருக்க முடியாது.

இளைய நரேந்திரனிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "இறைவனுடைய சாந்நித்யத்தை நீ உள்ளத்தினுள்ளே உணர்ந்தால்

மட்டும் போதாது. அம்மெய்ப்பொருளோடு நீ வித விதமான பாங்குகளிலே ஒட்டி உறவாடத் தெரிந்து கொள்ளுதல் முற்றிலும் அவசியமாகிறது. கடவுள் காட்சி என்பது யாது? சுத்தியடைந்து வருகிற மனது இவ்வுலகை அல்லது இவ்வுலகின் சிறு பகுதியை உள்ளவாறு காண்கிறது. சாதகன் ஒருவனுக்கு இது போதாது. நல்லுணவின் ஒரு கவளத்தை எடுத்துச் சுவை பார்த்தால் மட்டும் போதுமா? நல்லுணவை எல்லாவிதங்களிலும் சுவைத்து அருந்துவது அவசியமாகிறது. அதே விதத்தில் இறைவனோடு எல்லாப் பாங்குகளிலும் இணக்கம் கொள்ளுவது முற்றிலும் அவசியமாகிறது. இறைவனுடைய சாந்நித்தியத்தை யாண்டும் உள்ளத்தினுள்ளே உணர்தல் வேண்டும். அப்பொருளோடு பேசிப் பழகுதல் வேண்டும். அதாவது ஞான இணக்கத்திலே ஊறியிருத்தல் வேண்டும்.

"பாலைப்பற்றிக் கேள்விப்பட்டவர்கள் சிலர். அதிலும் சிலர் பாலைத் தங்கள் கண்கொண்டு பார்த்து இருக்கிறார்கள். இனி மிகச் சிலரே பாலைச் சுவைத்து அதன் அருமையை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர். ஈசனைப்பற்றிய விஷயமும் இத்தகையதேயாம்.

"வீதியிலே பவனிவருகின்ற அரசனை எல்லாரும் தரிசிக்கலாம். ஆனால் அத்தகைய மேலாம் பதவி வகிக்கின்ற வேந்தன் ஒருவனைத் தன் வீட்டுக்கு அழைக்கும் தகைமை யாரோ சிலருக்குத்தான் உள்ளது."

இப்பொழுது ஆங்கே அமர்ந்திருந்த மகேந்திரர் யாருக்கும் தெரியாது அமைதியாக எழுந்திருந்து மாளிகைக்கு வெளியே சென்று கங்காஸ்நானத்தை முடித்துவிட்டு மீண்டும் அமைதியாக மாளிகைக்கு வந்து அமர்ந்துகொண்டார். அப்பொழுது காலை சுமார் பத்துமணி இருக்கும்.

பரமஹம்சதேவர் ஆனந்த பரவச நிலையில் ஆழ்ந்து மூழ்கியிருந்தவராகத் தென்பட்டார். அருளமுதம் அவருடைய திருவாய் மலரினின்று பொழிந்தவண்ணமாயிருந்தது. ஆங்கு அமர்ந்திருந்து அவருடைய அமுதங்களைப் புசித்துப் பரமானந்தத்தில் திளைத்திருந்த அன்பர்கள் காலம் கடந்து போனதை அறியவில்லை. அவருடைய மனது உலாவிக்கொண்டிருந்த அதீத நிலைக்குப் பக்தர்களும் தங்களையறியாது எடுத்துச் செல்லப்பட்டு இருந்தனர்.

பரமஹம்சதேவர்: "மதுரநாத் விஸ்வாசுடன் நான் காசிக்குச் சென்று இருந்தேன். அக்காசியம்பதியிலே அரிய பெரிய காட்சிகளை ஞானக் கண்ணால் கண்டு நான் ஆனந்த பரவசம் அடைந்திருந்தேன். ஒருநாள் படகில் எங்கள் கூட்டத்தார் எல்லாரும் காசியின் மேல் பகுதியிலிருந்து வடதிசையாக ஊர்ந்து சென்றோம். ஒவ்வோர் இடத்திலும் அப்புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமைகள் என் மனத்தகத்துத் தோன்றி என்னைப் பரவசத்தில் ஊறியிருக்கும்படி செய்து வந்தன. அந்த க்ஷேத்திரத்தில் நடுவிலிருந்த மணிகர்ணிக கட்டம் என்னும் புனிதமான இடத்துக்குப் படகு மிதங்கிக்கொண்டு வருவதாயிற்று. ஆங்கு நான் கண்ட காட்சியை என்னென்று இயம்புவேன்!

"திடீரென்று படகின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு இருந்த எனக்குச் சமாதிநிலை கூடிற்று. எழுந்து நின்றேன். படகோட்டி உடனே ஹிருதயனைப் பார்த்து "அவரைப் பிடித்துக்கொள், அவரைப் பிடித்துக்கொள்" என்று ஓலமிட்டான். படகின் விளிம்புப் பக்கம் நின்றுகொண்டிருந்த நான் கங்கைக்குள் வீழ்ந்துவிடும் நெருக்கடியில் இருந்தேன் என்பதை அவன் அறியலாயினன்.

"அப்புண்ணிய க்ஷேத்திரத்தின் அதிஷ்டான தெய்வமாகிய சிவனாருடைய தரிசனம் எனக்குக் கிட்டுவதாயிற்று. ஆங்கு அவருடைய சாந்நித்தியம் மணிகர்ணிக கட்டத்தில் உச்சநிலை எய்தியிருந்ததை நான் காணலாயினேன். பரதகண்டம் எங்குமுள்ள முமுக்ஷுக்கள் தங்களுடைய அந்திய காலத்தைக் காசியில் முடித்துவிடும் ஆர்வத்துடன் காலமெல்லாம் அங்கு வந்துகொண்டேயிருக்கின்றனர். அன்னவர்களை உய்விக்கும் சீரிய பொறுப்பைச் சிவனார் எடுத்துக்கொண்டு இருப்பதாக நான் கண்டேன். அவர் என்னை உற்று நோக்கினார். நான் அவரை நோக்கிய வண்ணமாக நின்றுகொண்டு இருந்தேன். படிப்படியாக அவர் என்னை நோக்கி வந்தார். அப்படி வந்தவரை அனுபூதியில் கண்ட நான் ஆனந்த பரவசத்தில் மூழ்கினேன். அந்த ஆனந்தம் அவர் கிட்ட வரவர அகண்டாகாரமாக அதி

கரித்தது. அவர் என் மேனியினுள் பிரவேசிப்பதாக உணர்ந்தேன். என்னுடைய ஜீவ வியக்தி அத்துடன் முடிவுற்றது. மேலும் நிகழ்ந்தது யாது என்பதை அறிந்துகொள்வதற்கான ஜீவபோதம் ஆங்கு இல்லை.

"மற்ளெரு தடவை மற்றுமோர் அனுபவத்தை அக்காசியிலே நான் பெறலாயினேன். சன்னியாசி ஒருவர் ஆனந்த பரவசநிலையில் இருந்த என்னைக் கையைப் பிடித்துக்கொண்டு ஆலயம் ஒன்றுள் அழைத்துச் சென்றார். ஆங்குப் பொன்மயமான அன்னபூர்ணாதேவி வீற்றிருப்பதைக் காணலாயினேன்.

"உலகனைத்துமாய்க் காட்சி கொடுத்துக் கொண்டு இருப்பவர் கடவுள் ஒருவரேயாம். ஆயினும் அவருடைய சாந்நித்தியம் ஒரே பாங்கில் அமையவில்லை. பரம்பொருளின் சாந்நித்தியம் சில பொருள்களில் மிகைபட்டும் வேறுசில பொருள்களில் குறைந்தும் அமைந்துள்ளது."

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "ஒருவேளை சாளக்கிரமத்தில் நீ அதிக நம்பிக்கை கொள்ளாதிருக்கலாம். ஆங்கிலேயர்களுக்கு அவைகள் ஆராதனைக்குரியவை என்னும் நம்பிக்கை சிறிதளவும் இல்லவேயில்லை. மானுடன் ஒருவன் அதில் நம்பிக்கை வைத்திருக்கலாம். அதனல் என்ன? சாளக்கிரமம் ஒன்றில் சங்கு சக்கரத்தின் சின்னங்கள் இயல்பாகவே வந்து அமைந்திருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அப்பொருள் புனிதம் நிறைந்ததாகின்றது."

மகேந்திரர்: "ஆம் ஐயனே, சாளக்கிரமம் ஒன்று சங்குசக்கரத்துடன் அமையப்பெற்றதாக இருக்குமாயின் அது நிறைநிலையே. நிறை மனிதன் ஒருவனுடைய உடலமைப்பானது குறையில்லா நிறைநிலை பெற்றதாயிருக்குமாயின் அம்மனிதனிடத்துத் தெய்வீகம் தானகவே திகழ்கிறது."

பரமஹம்சதேவர்: "ஆரம்பதசையில் நரேந்திரன் இத்தகைய கொள்கைகள் எல்லாம் விவேகத்தோடு கலவாத வெறும் மூடநம்பிக்கையென்று விவாதித்து வந்தான். ஆனல் இப்பொழுதோ இவைகளில் அவன் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளான்."

பரமஹம்சதேவர் இங்ஙனம் பகர்ந்து கொண்டு இருக்கையில் அவருடைய தூய மனதானது ஆனந்தபரவசத்தில் ஈடுபடுவதாயிற்று. அதன் விளைவாக அவர் மூச்சற்றுப் பேச்சற்று வார்த்த விக்ரகம் போன்று அமர்ந்திருந்தார். அது பாராட்டுதற்குரிய பெரிய நிலை. ஆயினும் அங்குக் குழுமியிருந்த பக்தர்கள் அவர் சிறிது கீழ்நிலைக்கு இறங்கி வந்து தங்களோடு உறவாடுவாராகில் தங்களைப் பொறுத்தவரையில் அந்நிலையில் அவர்கள் அதிகமாக ஆனந்த முற்று இருப்பர். சிறிது நேரத்துக்குப் பிறகு பிரபஞ்ச ஞாபகம் அடையப் பெற்றவராகப் பரமஹம்சர் உலக வியவகார நிலைக்கு இறங்கி வந்து தம்மை உற்று நோக்கிக்கொண்டு இருந்த அன்பர்களோடு உரையாடினர்.

பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் மொழிந்ததாவது: "நான் இப்பொழுது அடையப் பெற்ற சமாதிநிலையில் எதைக் கண்டேன் என்பது தெரியுமா? பிரபஞ்சம் முழுதும் சாளக்கிரமத்திலேஅடங்கியிருந்தது. அத்துடன் அவ்வுண்மையைப்பற்றிய ஞானநிலையை அறிந்துகொள்ளுதல் பொருட்டு என்னுடைய கண்கள் இரண்டும் அக்காட்சியில் மூழ்கியிருந்தன."

அவர் அடைந்திருந்த ஆத்மானுபூதியைப் பற்றிய கூற்றுக்களுக்கு மகேந்திரரும் ஏனைய பக்தர்களும் வியப்புடன் செவிமடுத்துக் கொண்டு இருந்தனர். இத்தருணத்திலே பரமஹம்சரின் இளைய சிஷ்யர் சாரதா என்பவர் அறைக்குள்ளே நுழைந்து பரமஹம்சரின் பாதகமலங்களைத் தொட்டு வணங்கினர்.

அச்சிஷ்யரைப் பார்த்துப் பரமஹம்சதேவர் வினவியதாவது: "நான் கல்கத்தா வருகிற பொழுது நீ ஏன் என்னைக் காண வருவதில்லை? இடையிடையே தட்சிணேசுவரத்துக்கு வருகின்ற செயலையும் நீ ஏன் செய்கிறதில்லை?"

சாரதா: "ஐயனே, தாங்கள் கல்கத்தா எழுந்தருளுவதைப்பற்றியச்செய்தியை யாரும் எனக்குத் தெரிவிக்கிறதில்லை."

பரமஹம்சர்:"அடுத்ததடவை நான் கல்கத்தா வருகின்றபொழுது அதைப்பற்றியச் செய்தி உனக்குக் கிடைக்கும்படிச் செய்கிறேன்."

பிறகு புன்னகை பூத்தவராகப் பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் தெரிவித்ததாவது: "இவன் போன்ற இளைஞர்களின் ஜாபிதா ஒன்றை ஆயத்தப்படுத்துவாயாக!"

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-18. தந்திரத்தை மந்திரத்தைச் சாரின்நவை
ஆம் அறிவுஎன்று
எந்தைஉணர் வேவடிவாய் எய்துநாள்
எந்நாளோ.

பரவித்தை, அபரவித்தை என்று கல்வியை இரண்டாகப் பிரிக்கலாம். அபரவித்தை என்பது பிரபஞ்ச சம்பந்தமான அறிவாகும். பிரபஞ்ச சம்பந்தமான கல்வியில் எத்தனையோ முறைகள் இருக்கின்றன. போக்குவரத்துச் சாதனத்தை எடுத்துக் கொண்டால் நிலத்தில் செல்வதற்குச் சைக்கிள், மோட்டார், ரயில் போன்ற எத்தனையோ வாகனங்கள் இருக்கின்றன. நீரில் போவதற்கும் வழிகள் கண்டு பிடித்திருக்கின்றார்கள். ஆகாயத்தில் செல்வதற்கும் உபாயம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் போக்கு வரத்து நிகழ்த்துவதற்குரிய தந்திரங்களாகின்றன. இத்தனை வழிகளில் செல்வதற்குரிய யந்திரங்களைக் கண்டு பிடித்த மனோசக்திக்கு மந்திரம் என்று பெயர். மனோமுயற்சியையும், மனோமுயற்சியால் கண்டு பிடிக்கப்பட்ட யந்திரங்களையும் கையாண்டு பிரபஞ்ச வாழ்க்கையில் போகத்தை அனுபவித்து வருகின்றோம். பிரபஞ்ச சம்பந்தமான சிந்தனையும் கண்டு பிடிப்புகளும் போகத்தை வளர்ப்பதற்குப் பயன்படுகின்றன. போகத்தில் மனதைச் செலுத்துகின்றவளவு யோகத்துக்குரிய உணர்வு வளர்வது தடைப்படுகிறது. ஆத்ம போதத்தை வளர்க்கும் உணர்வைத் தடைப்படுத்துகின்ற அறிவைப் பொருந்தும்பொழுது அது வாழ்வைத் திசை திருப்பிச் செலுத்துகிறது. எனவே அந்த அறிவைக் குற்றமான அறிவு என்கிறோம். இதனைத் தாயுமானவர் 'தந்திரத்தை மந்திரத்தைச் சாரின் நவையாம் அறிவு' என்று பகர்கிறார். போகம் துன்பத்துக்கு வித்து ஆகின்றது. உலக போகத்தை எவ்வளவு அனுபவிக்கின்றோமோ பிறகு அவ்வளவு துன்பத்தை அனுபவித்தாக வேண்டும். அறிவின் மூலம் துன்பம் துடைக்கப்படவேண்டும். துன்பத்தைத் தரும் அறிவு நல்லறிவு ஆகாது. எனவே பிரபஞ்ச வாழ்வில் சுகபோகத்தைப் பெருக்குவதற்குமட்டும் அறிவை வளர்த்து வருவோமாயின் அது மெய்யறிவு ஆகாது என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

மெய்யுணர்வு அல்லது மெய்ஞ்ஞானம் பெறுவது வாழ்க்கையின் குறிக்கோள். போக வாழ்விலிருந்து மனதை மீட்டெடுக்கின்றளவுதான் யோகவாழ்வு கைகூடுகிறது. விவேகமும் வைராக்கியமும் உடையவர்கள் தங்கள் மனதைத் தெய்வத்தின்பால் திருப்புகின்றனர். மனம் போகவாழ்வை நாடுகின்றபொழுது அது மயக்கத்தை அடைகின்றது. போகநாட்டத்தைத் தியாகம் செய்கின்றளவு மனம் தெளிவடைகின்றது. போக வாழ்வுக்குரிய உணர்ச்சியை வெல்லுகின்றளவுதான் மேலாம் உண்மைகள் மனதுக்கு விளங்குகின்றன. மெய்ப்பொருள் நாட்டம் அப்பொழுது உண்டாகிறது. பேருணர்வில் திளைத்திருந்து மெய்ப்பொருளைச் சார்ந்திருக்கும் பெருவாழ்வு அப்பொழுது சொந்தம் ஆகிறது. ஈசா, உம்மைச் சார்ந்திருந்து பெருவாழ்வு வாழ்ந்து பேருணர்வை வளர்க்கும் நாள் எந்நாளோ என்பதை "எந்தை உணர்வே வடிவாய் எய்துநாள் எந்நாளோ" என்று தாயுமானவர் பகர்கிறார்.

14-19. போக்குவரவு அற்றவெளி போல்நிறைந்த
போதநிலை
நீக்கம்அறக் கூடி நினைப்புஅறுவது
எந்நாளோ.

எங்கும் நிறைந்த பொருளுக்குப் போதல், வருதல் என்ற சலனம் இல்லை. ஆகாயம் எங்கும் இருப்பதால் அதற்குச் சலனம் இல்லை. மனம் நிறைநிலை அடைகிறபொழுது அதற்குச் சலனம் இல்லை. எப்பொருளும் தனக்கு அந்நியமானது அன்று என்று உணரும்பொழுது நமக்கு அந்நியமான பொருள் எதுவும் இருப்பதில்லை. அதை அபேத நிலை எனலாம்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவர ஆலயத்தில் வாழ்ந்து வந்தபொழுது, ஒருநாள் அம்பிகையின் சன்னிதியின் முன் ஞானி ஒருவர் உருக்கமாகப் பாடி உள்ளத்தைத் தெய்வத்திடம் ஒப்படைத்த பாடலைக்கேட்டுப் பரவசமடைந்தார். அம்மகான் சன்னிதியைவிட்டு வெளியே வந்த

தும் எச்சில் உணவைத் தின்றுகொண்டிருந்த நாய்களோடு உறவாடினர். அவருடைய செய்கை ஞானியின் செயலுக்கு ஒத்திருந்ததை ராமகிருஷ்ணர் பார்த்து ஹிருதயரை அழைத்து அவரிடம் உபதேசம் வாங்கிக்கொள்ளுமாறு கூறினர். ஹிருதயர் அந்த மகானைப் பின் தொடர்ந்து சென்று "எனக்கு ஏதாவது உபதேசம் செய்யுங்கள்" என்று கேட்டார். அந்த மகான் திரும்பிப்பார்க்காது போய்க்கொண்டே இருந்தார். ஹிருதயரும் அவரைப் பின் தொடர்ந்து சென்ருர். சாக்கடை ஒன்று கங்கையில் கலக்குமிடத்தில் அம்மகான் நின்ருர். தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஹிருதயரைப் பார்த்து "இச்சாக்கடையும் கங்கையும் ஒன்று என்ற திருஷ்டி உண்டாகும் பொழுதுதான் உனக்கு ஞானம் வந்ததாகக் கொள்ளலாம்" என்று கூறினர். சாக்கடை வேறு, கங்கைவேறு என்று பொருள்படுத்துவது அஞ்ஞானநிலையில் நிகழ்வதாகும். சாக்கடை நதியில் சேர்ந்ததும் நதிமயம் ஆகிவிடுகின்றது. ஜீவன் பரத்துடன் சேர்ந்ததும் பரசொரூபமாகிவிடுகின்ருன். சாக்கடையைக் கங்கையிலிருந்து வேறுபடுத்துவது சாக்கடையில் உள்ள அழுக்காகும். அஃதே போன்று ஜீவாத்மனைப் பரமாத்மாவினிடமிருந்து வேறுபடுத்துவது ஜீவாத்மனிடத்திலுள்ள அழுக்கேயாகும்.

ஜீவாத்மாவின் மனதில் அழுக்கு இருக்கும் வரையில் பிறப்பு இறப்பு அவனுக்கு உண்டு. ஆசைதான் போக்கு வரவு என்னும் குறைநிலையை உண்டாக்குகிறது. இறைவன் ஒருவரே பூரணப்பொருள். எனவே அவர் நிராசை உடையவர். அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. பூரணநிலையில் அவர் இருப்பதால் அவர் நிறை ஞானம் உடையவர். அத்தகைய பொருளோடுகூடி ஆனந்த நிலையை அடைய வேண்டுமென்று இக்கண்ணியில் தாயுமானவர் இயம்பியுள்ளார்.

14-20. காண்பானும் காட்டுவதும் காட்சியுமாய்
நின்ற அந்த
வீண்பாவம் போய் அதுவாய் மேவுநாள்
எந்நாளோ.

தாயுமானவர் இக்கண்ணியில் திரிபுடி மயமாக இருக்கும் நினைவினை நீக்கி அகண்ட சச்சிதானந்தமாயிருக்கும் ஏகாக்ர நிலை அடையும் நாள் விரைவில் வந்து வாய்க்கவேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பிக்கின்ருர். அறிவோன், அறியப்படுபொருள், அறிவு; காண்போன், காணப்படுபொருள், காட்சி; ஞாதுரு, ஞேயம், ஞானம் என்று திரிபுடியை அழைக்கலாம்.

இம்மூன்றில் ஒன்று இல்லாவிட்டாலும் அனுபவம் இல்லை. காண்போனுகிய ஜீவனும், காணப்படு பொருளாக இருக்கின்ற உலகமும் இவ்விரண்டுக்கும் தொடர்பை ஏற்படுத்துகின்ற காட்சியும் அனுபவத்தை உண்டாக்குகின்றன. இந்நிலையில் காண்பவனும், காணப்படுபொருளும் காட்சியில் வெவ்வேறு பொருள்களாக இருக்கின்றன. உண்மையில் இம்மூன்றும் வெவ்வேறு பொருள்கள் அல்ல. இம்மூன்றும் ஒரே பொருளாம். நம்மிடத்திலுள்ள நினைப்பே இம்மூன்று பொருள்களைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கிறது. அயர்ந்த உறக்கத்தில் நினைப்பு ஒடுங்கிவிடுகிறது. அப்பொழுது காண்போன் தன்னில் தானய் இருக்கின்ருன். விழிப்பு நிலையில் திரிபுடி மயம் ஆகிவிடுகின்ருேம்.

அஞ்ஞானத்திலிருக்கின்ற ஜீவனுக்குத் திரிபுடி நினைவுஉள்ளத்தில் உறுதிபெற்றிருக்கிறது. அஞ்ஞானமென்னும் மயக்கநிலை நீங்கும் பொழுதுதான் திரிபுடிமயமாக இருக்கும் நினைவு மாறி அகண்ட சச்சிதானந்தம் தான் என்ற நினைவு உண்டாகிறது. ஈசா உன் அருளால் நான் திரிபுடிமயமாக இருக்கின்றேன் என்ற நினைவு மாறி உன்னேடு இரண்டறக் கலந்து சச்சிதானந்தமயமாக இருக்கும் நிலை ஏற்படவேண்டும். மயக்க வாழ்வை உதறித்தள்ளித் தெளிந்த ஞான வாழ்வைப் பெறுகின்ற பேற்றைத் தாயுமானவர் இறைவனிடம் இக்கண்ணியின் மூலம் பிரார்த்திக்கின்ருர். திரிபுடி பாவனையை வளர்த்து வருபவர்கள் வீண்காலம் போக்குகின்றவர்களாகிருர்கள். எனவே தாயுமானவர் திரிபுடி பாவனையை வீணை நினைப்பு என்கின்ருர். நாம் சச்சிதானந்த சொரூபம் என்று உணரவேண்டும். திரிபுடியாக இருக்கும் வீணைநினைப்பை ஒழித்து அகண்டசச்சிதானந்த மயமாயிருக்கும் நினைப்பைத் தாயுமானவர் இக்கண்ணியில் வலியுறுத்துகிருர்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-21

சசிமகராஜுக்குச் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதத்தின் கருத்துக்களாவன:

உலகில் மூன்று வகையான துன்பங்கள் உண்டு என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், அத்யாத்மிகம் என்பனவாம். இத்துன்பங்களை நாம் அகற்றிவிட முடியும். சரீரத்துக்குத்தான் துன்பம் வரும். ஆத்மாவுக்குத் துன்பம் இல்லை.

அவித்தைதான் துன்பத்துக்கு எல்லாம் காரணம் என்று கிருஷ்ண பரமாத்மா பகர்ந்துள்ளார். தன்னலமற்ற பணிவிடை சித்தத்தைச் சுத்தி செய்யும். கர்மம் எது? கர்மம் அற்ற நிலை எது? என்பதைத் தீர்மானிப்பதில் முனிகளே குழப்பநிலையில் இருக்கிறார்கள். முன்காலத்தில் யாகங்கள் நிகழ்ந்து வந்தன. இக்காலத்தில் அத்தகைய யாகங்கள் இல்லை. இன்றைக்கு ஞானமும் பக்தியும் அவசியமாகின்றன. இதைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலகுக்கு வழங்கி இருக்கின்றார். ஞான வாளைக்கொண்டு நாஸ்திகத்தை ஒழிக்க வேண்டும். பக்தியின்மூலம் உலக மக்களை ஒன்றுபடுத்தவேண்டும். பேர் புகழை விரும்பாது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அமுத மொழியைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஏற்றுக்கொள்கிறீர்களா? ஏற்றுக்கொள்ளவில்லையா? என்பது முக்கியமானதன்று. அவருடைய உபதேசங்களைச் செயலுக்குக்கொண்டு வருவதுதான் முக்கியமானது.

மத ஸ்தாபனங்களைத் தோற்றுவித்தவர்கள் நல்லதையே செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்ததை இன்னும் சிறந்த பயன் அளிக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான கொள்கையில் செல்லட்டும். அக்கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்கள் உயர்நிலையை அடையவேண்டும். யார் யார் எந்த எந்த நிலையில் இருக்கிறார்களோ அந்நிலையிலிருந்து மேல்நிலைக்குப் போவதற்கு அவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கைகள் துணைபுரியவேண்டும்.

பெண்பாலர்களுடைய நிலை உயர்த்தப்படாவிடில் நாட்டுக்கு நலன் எதுவும் விளைந்துவிடாது. ஆண்பாலர்களும் பெண்பாலர்களும் சம உரிமையோடும், சம அந்தஸ்தோடும் வாழ்ந்து வருவதற்கு வாய்ப்பு இருக்கும்பொழுதுதான் நாடு முன்னேற்றமடைய முடியும். பெண்பாலர்களை எத்தகைய உயர் நிலையில் வைக்கமுடியுமோ அவ்வுயர்நிலையில் அவர்களைவைத்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் வழிபட்டார். பைரவி பிராமணி என்ற அம்மையாரைத் தம்முடைய குருவாக ஏற்றுக்கொண்டார். பெண்பாலர்களைப் பராசக்தி சொரூபமாகப் பாவிக்க வேண்டுமென்று உபதேசித்தார். ஸ்ரீசாரதாதேவியாரைத் தெய்வமாக வைத்து வழிபட்டார். தம் உள்ளத்தில் ஆண் என்ற உணர்ச்சியை மாற்றி அமைப்பதற்காகப் பெண் போல் உடைதரித்துப் பெண்பாலர்களிடம் பழகி வந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கருத்தை நாம் நிறைவேற்றுவதற்குப் பெண்களுக்கு ஒரு மடம் ஆரம்பிக்கவேண்டும் என்று நான் நினைக்கின்றேன். கார்க்கி, மைத்ரேயி போன்ற உயர்ந்த பெண்பாலர்களை அம்மடம் தோற்றுவிக்க வேண்டும்.

ஏமாற்று வித்தையின் மூலம் பெரியகாரியம் ஒன்றையும் சாதிக்க முடியாது. சிறந்த காரியங்கள் அன்பினாலும், சத்தியத்தின் மீதுள்ள ஆர்வத்தினாலும், ஆற்றலினாலும் சாதிக்கப்படுகின்றன. மனிதத்தன்மையையும், தெய்வத்தன்மையையும் தோற்றத்துக்குக் கொண்டு வருவதன்மூலம் சிறந்த காரியங்கள் செய்யப்படுகின்றன.

யாருடனும் சண்டை சச்சரவு வேண்டாம். நீ என்ன சொல்ல விரும்புகின்றாயோ அதை உலகுக்குச் சொல். அது நல்லதா கெட்டதா என்பதை உலகத்தவர் சிந்தனைக்கு விட்டுவிடு. சத்தியம் தான் வெல்லும். அசத்தியம் ஒருநாளும் வெல்லாது. இவ்வுண்மையை அறிந்து கவலையற்றுச் செயல்புரிந்து வாருங்கள். செயல் வெற்றியடைய வேண்டும் என்ற கவலை உங்களுக்கு எதற்கு? எல்லாருடனும் ஒற்றுமையுடன் வாழுங்கள். அகங்காரம் வேண்டாம்; மதவெறி வேண்டாம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

192. सुपर्णः ஸுபர்ண:—அழகிய சிறகுகளை உடையவர்.

பறவைகளுக்கு இரண்டு சிறகுகள் இருக்கின்றன. இரண்டு சிறகுகளுள் ஒன்றில்லா விட்டால் பறவை பறக்க முடியாது. வாழ்க்கைக்கு ஞானம், பக்தி என்ற இரண்டு அழகிய சிறகுகள் தேவை. அவற்றுள் ஒன்றில்லா விட்டாலும் வாழ்வு ஒழுங்காக நடைபெறாது.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் அதாவது தோற்றுவித்தல், காப்பாற்றுதல், அழித்தல் என்ற முத்தொழில்களைப் பிரம்மா, விஷ்ணு, சிவன் செய்து வருகிறார்கள். உயிர்களைக் காப்பாற்றுகின்ற செயலை விஷ்ணு எடுத்துக் கொள்கின்றார். ஞானத்தையும் பக்தியையும் தந்து உயிர்களை அவர் படிப்படியாக மேல் நிலைக்குக் கொண்டு வருகிறார். விஷ்ணுவை உபாசிக்கின்றவர்களுக்கு அவர் ஞானத்தையும், பக்தியையும் வழங்கி வருகிறார் என்பதை அழகிய சிறகுகளையுடையவர் என்னும் இந்நாமம் விளக்குகின்றது.

193. भुजगोत्तमः புஜகோத்தம: — உத்தமமான பாம்பின் மேல் பள்ளிகொண்டிருப்பவர்.

ஐந்து தலைகளுடைய நாகத்தின் மீது விஷ்ணுவானவர் பள்ளிகொண்டிருக்கிறார். பாம்பு சக்தியின் சின்னமாகும். பிரபஞ்சம் சக்தியின் சொரூபம், ஐந்து தலைகள் ஐம்பூதங்களைக் குறிக்கின்றன. சிலந்திப் பூச்சி தன் உடலினின்று வந்த வலையிலேயே வசிப்பது போன்று தன்னிடத்திலிருந்து உண்டான பஞ்சபூதமயமாயிருக்கின்ற பிரகிருதியில் பகவான் வீற்றிருக்கிறார் என்பதை விஷ்ணுவினுடைய அனந்தசயனம் விளக்குகின்றது.

மஹாவிஷ்ணு உறங்குகின்ற உறக்கத்தை அறிதுயில் என்கின்றோம். பேருணர்வு பேரறிவு மயமாக இருந்துகொண்டு அவர் உறங்கிக் கொண்டிருக்கிறார். பிரகிருதியில் நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதை அவருடைய அறிதுயில் விளக்குகின்றது. பிரபஞ்சத்தில் வாழ்கின்ற நாம் மயக்கத்துக்கு உட்படலாகாது. நாம் யாரென்பதை முற்றும் உணர்ந்த நிலையில் பிரபஞ்சத்தில் கட்டுப்படாது வாழ்ந்து வர வேண்டும். பிரபஞ்ச வாழ்க்கையை நன்கு வாழத் தெரிந்து கொண்டவர்கள் பரவாழ்வுக்குத் தகுதியுடையவர்களாகிறார்கள். பர வாழ்வு என்பது உண்மையை உள்ளபடி அறிந்து அதில் விழிப்புணர்வுடன் நிலைபெற்றிருப்பதாகும். பிரபஞ்ச வாழ்வு வாழ்வதற்கிடையில் மயக்க நிலையை அடையாது தெளிந்த நிலையில் யாண்டும் இருக்கவேண்டும் என்பதை மஹாவிஷ்ணுவின் அனந்த சயனம் நமக்குப் புகட்டுகின்றது.

194. हिरण्यनाभः ஹிரண்யநாப: — பொன் போன்ற அழகிய நாபியை உடையவர்.

பிரம்மா சிருஷ்டிகர்த்தா ஆகிறார். அவர் வேதநாயகனும் ஆகிறார். நான்கு வேதங்களை நான்கு முகங்களாகக்கொண்டு இருக்கிறார். அவர் திருமாலின் நாபிக்கமலத்தில் உதித்தவராவார். பிரம்மாவைத் தோற்றுவித்த சிறப்புப் பொருந்திய நாபியை உடையவர் திருமால். சிருஷ்டி அல்லது தோற்றத்துக்கு வருவதன் மூலம் ஒவ்வொரு பொருளும் தன் மகிமையை விளக்குகின்றது. ஒவ்வொரு பொருளும் தன் மகிமையை விளக்குவதற்கு ஏற்ற வாய்ப்பினைப் பிரம்மா சிருஷ்டி கடவுளாக இருந்து உதவி வருகின்றார். எனவே உயிர்களினுடைய பெருமையை விளக்குவதற்கு உதவும் பிரம்மா பெருமைக்குரியவர் ஆகின்றார். பெருமைக்குரிய பிரம்மாவைத் தோற்றுவிக்கும் சிறப்பைத் திருமாலின் நாபிக்கமலம் பெறுகின்றது. பெருமை மிக்க மக்களைத் தோற்றுவிக்கும் நாடு சிறப்பைப் பெறுவதுபோன்று பெருமைக்குரிய பிரம்மாவைத் தோற்றுவிக்கும் நாபியும் சிறப்பைப் பெறுகிறது.

195. सुतपाः ஸுதபா:—சிறந்த தவம் செய்பவர்.

ஜீவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதைத் திருமால் தாமே தவ சொரூபமாக இருந்து விளக்குகிறார். தவத்தின் மூலமாகத்தான் ஜீவர்கள் தங்களை உயர்த்திக்கொள்ள முடியும். தவத்தின் மூலம் நாம் ஆன்ம பலத்தைப் பெறலாம். பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்ததன்மூலம் தங்களைப் பலம் மிக்கவர்கள் ஆக்கிக்கொண்டார்கள். தாங்கள் தவத்தின் மூலம் பெற்ற பலத்தைத்

தர்மத்தைப் பரிபாலிப்பதற்காகப் பயன்படுத்தினர்கள். அதில் வெற்றியும் அடைந்தார்கள். விசுவாமித்திரருடைய சேனுபலம் வசிஷ்டரின் தபோபலத்தின் முன் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. தவத்தின் மூலம் துருவன் அழியா நிலையை அடைந்தான். தவத்தின் மூலம் விசுவாமித்திரர் பிரம்ம ஞானம் பெற்ருர்.

தவம் காமனைத் தகனம் பண்ண உதவுகிறது. காமதகனம் நிகழும்பொழுது ராமன் காட்சிக்குரியவனுகின்ருன். ராமனுள்ள இடத்தில் காமனில்லை; காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை என்பது கோட்பாடு. மனம் ராமனைச் சிந்தனை பண்ணும்பொழுது அதிலுள்ள காமம் அழிகிறது. சீதை அசோக வனத்தில் இருந்தபொழுது ராம சிந்தனை என்னும் கடும் தவம் செய்தாள். அதன் விளைவாக அவள் தவசொருபமானுள். தவசொருபத்திலிருந்த சீதையைப் பார்த்து அனுமான் ஆனந்த பரவசம் அடைந்தான். ராம சிந்தனை என்னும் தவத்தின்மூலம்சீதை அயோத்தி ராமனை ஆத்ம ராமனுக்கிக்கொண்டாள். திருமால் சிறந்த தவ சொருபமாக இருந்து ஜீவர்களைத் தவமயமாக்குகின்ருர். ஜீவர்கள் தவத்தின் மூலம் கீழ்மையனைத்தையும் அகற்றித் தெய்வத் தன்மையை வளர்க்கின்றனர்.

196. पद्मनाभः பத்மநாப: — பத்மம்போன்ற நாபியையுடையவர்.

நாலாயிரம்கோடி காலத்தொகையைப் பத்மம் என்கிருேம். காலத்தையும் விழுங்கிய பகவானிடமிருந்து காலம் கமலருபமாய்த் தோன்றியது. நம் அமைப்பில் ஹிருதயத்தைக் கமலம் என்கின்ருேம். கமலநாதனை நாம் ஹிருதய கமலத்தில் வைத்துப் பூஜிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஹிருதயத்தை அன்புக்கு உறைவிடமாகவும் கொள்கின்ருேம். ஹிருதயத்தை மலரச் செய்வதன் மூலம் நாம் மஹாவிஷ்ணு சொருபமாகிருேம்.

ஹிருதயத்தை மலரச் செய்கின்ற கல்வியே நமக்கு உகந்த கல்வியாகும். ஸ்ரீராமகிருஷ்ணர் ஹிருதயத்தை மலரச் செய்கின்ற கல்வியைத்தான் கற்ருர். 'கல்லாத கல்விபலக் கடல்' என்னும் புகழையும் பெற்ருர்.

கருவிலிருக்கும் சிசுவிற்கு நாபியின் வழியாக உயிர்ச்சக்தி செல்கிறது. வாயின் மூலமாக உணவை உண்டு உயிர்ச்சக்தியைப் பெறுவது கருவிலிருந்து வெளியே வந்த பிறகு நிகழ்கிறது. கருவுக்குள்ளிருக்கும் பொழுது சிசு நாபியின் மூலம்தான் உயிர்ச்சக்தியைப் பெறுகிறது. கருவிலிருக்கும் சிசுவை நாபிக்கமலம் காப்பாற்றுவது போன்று பிரகிருதி என்னும் கர்ப்பாசயத்தில் வாழ்ந்துவரும் ஜீவர்களை விஷ்ணு காப்பாற்றி வருகின்ருர். எனவே அவர் பத்மநாபன் என்னும் பெயர் பெறுகிருர்.

சூரியன் வருகையால் தாமரை மலர்வது போன்று விஷ்ணுவின் சாந்நித்தியத்தால் ஜீவர்கள் பிரகாசம் பெறுகின்றனர். தாமரை மலர்ந்ததும் அது உயிர்களைத் தன்பால் கவர்கிறது. விஷ்ணுவின் அருள் பெற்ற ஜீவர்கள் மக்களைத் தம்பால் கவர்கிருர்கள். பத்மம் அல்லது தாமரை அழகின் தோற்றமாகிறது. மஹாவிஷ்ணுவும் அழகின் தோற்றமாகிருர். மஹாவிஷ்ணுவின் அம்சமான ராமபிரான் அழகின் சொருபமாகிருர். ராமபிரானின் மேனியழகைக் கம்பன் வர்ணிக்கின்ற பொழுது தாள் கண்டார் தாளே கண்டார் என்கிருர். அஃதாவது ராமபிரானின் ஓர் உறுப்பைப் பார்த்தவர்கள் அந்த உறுப்பின் அழகை ரசித்து இன்பமடைவதிலேயே ஈடுபட்டு விட்டனர். ராமன்அழகு அத்தகையதாக இருந்தது. ஞானிகளையும் பக்தர்களையும் தம்மால் இழுக்கும் கவர்ச்சி மஹாவிஷ்ணுவிடம் உண்டு. 'அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே' என்னும் சுவை ஒன்றே போதும் என்கிருர் ஆழ்வார் ஒருவர். எனவே அவருக்குப் பத்மநாபன் என்னும் நாமம் அமைந்திருப்பது அவருடைய பரசொருபத்தின் அழகை விளக்குகிறது. பத்மநாப நாமத்தை மனது ஆழ்ந்து உச்சரிக்கும் பொழுது அது பர உணர்வு வடிவு எடுக்கிறது.

உலகமக்கள் உடலழகில் உள்ளத்தைக் கொடுத்துவிடுகின்றனர். உடலழகில் உள்ளத்தைக் கொடுப்பவர்கள் காமத்தை வளர்க்கின்றனர். காமத்தை வளர்ப்பவர்கள் கீழ்மையையடைகின்றனர். பத்மநாப நாமத்தை உச்சரித்து அதில் தங்கள் உள்ளத்தைக் கொடுப்பவர்களுக்குப் பக்தி வளர்கிறது. பக்தியில் ஆழ்ந்துபோனவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். பத்மநாப நாமத்தை உச்சரித்துப் பக்தியை வளர்ப்போமாக.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (477) மக்களுக்காகச் சேவை செய்வது சிறந்ததா? சேவையை மறந்து தியானம் செய்வது சிறந்ததா?

உடல்தாங்கி இருக்குமளவு கர்மம் நிகழ்ந்தாகவேண்டும். கர்மத்தைச் சுயநலத்தோடும் செய்யலாம்; சுயநலமற்றும் செய்யலாம். சுயநலத்தோடு செய்யும் கர்மம் ஆசையையும் அகங்காரத்தையும் வளர்க்கிறது. ஆசையும், அகங்காரமும் தியானத்துக்கு இடையூறுகள் ஆகின்றன. சுயநலமற்றுச் செய்கின்ற கர்மம் சித்த சுத்தியை உண்டுபண்ணுகின்றது. சித்தம் சுத்தி அடைகின்றபொழுதுதான் தியானம் கைகூடுகிறது. மக்களைத் தெய்வ சொரூபமாகப் பாவித்து மக்களுக்குச் சேவை செய்வது சித்தத்தைச் சுத்திபண்ணுகின்றது. நர சேவையை நாராயண சேவையாகச் செய்ய வேண்டும் என்று விவேகானந்தர் கூறியுள்ளார்.

தியானம் செய்வது அவ்வளவு சுலபமன்று. இப்பிரபஞ்சம் அனைத்தும் ஈசனுடைய சொரூபமாகும். ஈசனைக் குறித்துத் தியானம் பண்ணுவதும் உயிர்களின் நலத்தைக்குறித்துத் தியானம் பண்ணுவதும் ஒன்றே. "லோகா: ஸமஸ்தா: சுகினோ பவந்து" என்பது உயிர்களின் நலத்தைக் குறித்துச் செய்யும் பிரார்த்தனையாகும். பிறகு உயிர்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைக் காயத்தைக்கொண்டு செய்வதும் கடவுள் வழிபாடேயாகும். காயத்தை மக்கள் சேவையில் ஈடுபடுத்துவது காயத்தைக் கொண்டு செய்யும் வழிபாடாகும். மக்கள் நலனைக் குறித்துப் பேசுவதும், பிரார்த்திப்பதும் வாயால் செய்கின்ற வழிபாடாகும். உயிர்கள் எல்லாம் நலன் அடையட்டும் என்று தியானம் செய்வது மனதால் செய்யும் வழிபாடாகும். மனிதன் தன்னிடத்திலுள்ள மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களையும் வழிபாட்டில் ஈடுபடுத்துதல் வேண்டும். கர்மம் பக்தி ஞானத்தின் மூலமாக முக்கரணங்களையும் வழிபாட்டில் ஈடுபடுத்திப் பழகவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதும், தியானம் செய்வதும் மன மாசை நீக்கிப் பரத்தோடு நம்மை லயப்படுத்த வேண்டும்.

இருபத்து நான்கு மணிநேரமும் தியானம் செய்துகொண்டிருக்க முடியாது. மக்கள் சேவையில் ஈடுபட்டு மனதைச் சுத்தி செய்துகொண்டு தியானமும் செய்து வரவேண்டும்.

கேள்வி: (478) உடலிலிருந்து ஆத்மா பிரிந்த பின் அவ்வாத்மா எப்படி இருக்கும்?

ஆத்மாவுக்குப் போக்கும் இல்லை; வரவும் இல்லை. போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன் என்று அவர் போற்றப்படுகின்றார். பழம் மரத்தை ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் மரத்திலிருந்து சக்தியைப் பெறுகிறது. மரத்தை விட்டுப் பிரிந்ததும் அது காய்ந்து போகிறது. சரீரம் ஆத்மாவைச் சார்ந்திருக்கும் வரையில் அதனிடத்து இயக்கம் இருக்கிறது. ஆத்மாவை விட்டுப் பிரிந்தபின் அவ்வடிவம் அழிகிறது. பிரிவது உடலே அன்றி ஆத்மா அன்று.

ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்னும் மூன்று சரீரங்கள் ஆத்மாவை மறைக்கும் திரைகளாக இருக்கின்றன. சரீர உணர்வுக்குக் கட்டுப்பட்டு இருக்கின்றபொழுது நாம் சரீரம் மயமாக இருக்கின்றோம். அப்பொழுது நாம் ஜீவாத்மாக்கள் என்று அழைக்கப்படுகின்றோம். நம் உணர்வு இம் மூன்று சரீரங்களையும் கடந்து செல்லும் பொழுதுதான் ஆன்மீக உணர்வு பெறுகின்றோம். தன்னில் தானாக இருக்கும் பேருணர்வு மயமாக ஆத்மா யாண்டும் இருக்கிறது. மனது ஆத்மாவைச் சார்ந்திருக்கிறபொழுது அதனிடத்துள்ள ஜடத் தன்மை நீங்கி ஆத்ம சொரூபத்தில் அது ஒன்றித்து விடுகிறது. விறகுக் கட்டை நெருப்பில் போட்டதும் நெருப்பு மயமாவது போன்று சொரூபத்தில் போடப்பட்ட மனது சொரூபமயமாய் விடுகின்றது. மனது சொரூபமயமாகும்பொழுது மனதின் தோற்றத்துக்குக் காரணமாயிருந்த அக்ஞானம் என்னும் காரண சரீரமும் அழிகின்றது. நாம் அகண்ட சச்சிதானந்த சொரூபம் ஆய் விடுகின்றோம்.

ஸ்தூல உடலுக்கு நாசம் உண்டாகும் பொழுது சூக்ஷ்ம சரீரமும், காரண சரீரமும் ஆத்மாவைப் பற்றியிருக்கின்றன. சூக்ஷ்ம சரீரம் தக்க சூழ்நிலை வரும்பொழுது மற்றொரு ஸ்தூல

சரீரத்தை எடுக்கிறது. அதைத்தான் பிறப்பு என்கிரேம். ஸ்தூல சரீரம் அழிவதை இறப்பு என்கின்ரேம். எனவே பிறப்பு இறப்பு என்பன ஸ்தூல சரீரத்துக்கே அன்றி ஆத்மாவுக்கு இல்லை. ஞானத்தின் மூலமாகத்தான் சூக்ஷ்ம சரீரத்தை அழிக்க முடியும். மனேநாசம் நிகழும் பொழுது மீண்டும் நமக்குப் பிறப்பு எடுக்கும் நிலை இல்லை. மனேநாசம் நிகழும் வரையில் பிறப்பும் இறப்பும் இருக்கும்.

கேள்வி (479) மன அமைதிபெறத் துறவறம் தான் சிறந்ததா?

உலகப்பற்று மன அமைதியைக் கெடுக்கிறது. மனம் உலகப் பொருளின்மீது பற்றுதல் வைக்கும்போது அப்பொருளைப் பற்றி நினைக்கின்றது. அந்த நினைப்பே கவலையை உண்டு பண்ணுகிறது. மனம் பிரகிருதியின் கூறு ஆகும். எனவே அது அலையும் தன்மையுடையது.

துறவறம் என்பது உலகப்பொருள்களிலுள்ள பற்றுதலிலிருந்து மனதை விலக்கி எடுப்பதாகும். உலகப்பொருள்களில் இன்பம் உண்டு என்னும் நினைவை அகற்றுவது துறவு ஆகும். உலகப்பொருளில் இன்பம் இல்லை என்பதை உள்ளத்துக்கு உணர்த்தியபின் அது உலகப் பொருளில் பற்று வைப்பதில்லை. பற்று நீங்கும் பொழுது மனதில் அலையும் தன்மை நின்று அது அமைதி அடைகிறது.

உலக மக்கள் உலகப்பொருள் சுகம் தரும் என்னும் எண்ணத்தில் ஊறி இருக்கின்றனர். அவ்வெண்ணத்தை அவர்கள் உள்ளத்திலிருந்து எளிதில் அகற்ற முடிவதில்லை. உள்ளத்தில் அவ்வெண்ணம் எவ்வளவு ஆழ்ந்து இடம் பெற்றிருக்கிறதோ அதற்கேற்ப அது அலையும் தன்மையுடையதாகவிருக்கும்.

குடும்ப வாழ்வில் இருந்தாலும், குடும்பத்தை விட்டு விலகித் துறவற வாழ்க்கையிலிருந்தாலும் மனதை உலக சுகத்திலிருந்து மீட்டெடுப்பவர்கள் மன அமைதியைப் பெறலாம். மனதை உலக சுகத்திலிருந்து விலக்கி எடுப்பதற்குக் குடும்ப வாழ்க்கையைவிடத் துறவற வாழ்க்கையே உதவியாக இருக்கும். குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள் புகை நிறைந்த அறைக்குள் இருப்பவர்களுக்கு நிகராகிறார்கள். புகை உள்ள அறையில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் உடையில் கரி படியத்தான் செய்யும். அங்ஙனம் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் உலகப்பற்று உண்டாவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகும். எனவே மன அமைதிக்குத் துறவற வாழ்க்கை மிக உதவியாக இருக்கும்.

கேள்வி: (480) பரசுராமனும் தசரத ராமனும் அவதார மூர்த்திகள் ஆவார்கள். இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர் செய்தது முறையா?

பரசுராமன் க்ஷத்திரியர் ஒருவரால் தம் தந்தை கொல்லப்பட்டதற்கு க்ஷத்திரிய குலத்தையே ஒழித்துவிடவேண்டும் என்ற அளவிற்குச் செருக்கு உடையவராக இருந்தார். தசரத ராமன் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தமையினல் அவரைப் பரசுராமன் வலியச்சண்டைக்கு இழுத்தார். "மிதிலையில் ஒடித்தவில் சொத்தைவில். என்கையில் உள்ள விஷ்ணுதனுசைப்பெற்று என்னுடன் போரிட்டு உன் பராக்கிரமத்தை வெளிப்படுத்து. உன்னை ஒழிப்பது என் திட்டம். வீரனுக மடிந்துபோ, அல்லது கோழையாக மடிந்துபோ" என்று பரசுராமன் மிதிலையிலிருந்து அயோத்திக்குச் சென்று கொண்டிருந்த ராமனை வலியப்போருக்கு அழைத்தார். தசரதராமன் அவருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படியும் முறையில் பணிவுடனும் அடக்கத்துடனும் பரசுராமன் கையிலிருந்த வில்லை வாங்கி நாணேற்றி அம்புக்கு இலக்குக் கேட்டார். பரசுராமன் தம் ஆணவ அஹங்காரத்தின் மீது செலுத்தும்படி கூறினர். தசரத ராமன் அங்ஙனமே செய்து பரசுராமனுடைய அஹங்காரத்தை ஒழித்து அவரைத் தவத்துக்கு அனுப்பி வைத்தார்.

அஹங்காரம் படைத்த மனிதனுக்கும் நிறை மனிதனுக்குமிடையே உள்ள போராட்டத்தை விளக்குவதே பரசுராமன் தசரதராமன் போராகும். மஹாவிஷ்ணுவினுடைய அவதாரம் படிப்படியாக ஜீவன் பரிணமித்து வருவதைக் குறிப்பதாகும். ஜீவன் ஒரு நிலையிலிருந்து அதற்கு மேலான நிலையை அடைவதற்குப் போராடியே ஆகவேண்டும். கீழ்மையைப் போராடி வெல்லுகின்ற பொழுதுதான் அவன் மேலாம் நிலையை அடைகின்ருன்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 4.

உத்தவர் சொன்னர்:— இங்ஙனம் அவர்களுடைய வழிபாடு, தானம் வழங்கல், எல்லாம் முடிந்த பிறகு அவர்கள் உணவும் மதுவும் அருந்தினர்கள். மதுவின் போதையினல், அவர்களுடைய புத்தி தடுமாற ஆரம்பித்தது. எப்போதோ கேட்ட, நடந்த சம்பவங்களைப் பற்றி வாய் உளற ஆரம்பித்தது. ஒவ்வொருவரது உளறலும் மற்றவர்களுக்குக் கோபம், ஆத்திரம் மூட்டியது. அது வாய்ச்சண்டையாகி விரைவில் கைகலக்கிற நிலேக்கு வந்துவிட்டது. அவர்களுக்குள் பிளவு உண்டாகி இரு கட்சிகளாகப் பிரிந்தனர். மூங்கில் மரங்கள் ஒன்றுக்கொன்று தமக்குள்ளேயே உராய்ந்து தீப் பற்றி முழுக்க எரிந்து சாம்பலாவது போன்று மாலேக்குள் அங்குக் கூடியிருந்த ராஜகுமாரர்கள், யாதவ வம்சத்தினர் அனைவரும் மதுவினல் அறிவிழந்து அழிந்து போனர்கள். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் என் ஆண்டவன் அறிந்துகொண்டார். சரஸ்வதி நதியில் தன் கைகால்களை அலம்பிக்கொண்டு தன் அங்கங்களை ஆசமனம் செய்து சுத்திசெய்துகொண்டார். ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தார். தன்னைச் சரணடைந்தவர்களைக் காத்தருளும் என் ஆண்டவன் தன் இனத்தைத் துடைத்து விட முடிவு செய்துவிட்டான். அதற்கு முன்னதாக என் பிரபு என்னிடம் துவாரகையில் இங்ஙனம் பகர்ந்தருளினர்: ‘உத்தவா, நீ பத்ரிகாச்ரமத்திற்குப் போய்விடு. என் பிரபு தன் இனத்தைத் துடைத்துவிட முடிவுபண்ணியிருக்கிருர் என்று என் மனதுக்குப்பட்டது. என் பிரபுவின் பிரிவைப் பொறுக்க முடியாதவனய் நான் என் ஆண்டவனைப் பின் தொடர்ந்தேன்.

என் பிரபு, என் தாய் லக்ஷ்மிதேவியின் பிரபு சரஸ்வதி நதிக்கரையில் ஒரு மரத்தடியில் ஏகாந்தமாய் வீற்றிருந்தார். அவரது திருமேனி நீலமேக சியாமளவர்ணம். அவரது அகன்ற கண்கள் மெல்லிய கருஞ்சிவப்பு. அவர் தூய்மையே வடிவெடுத்தவர். சத்வகுண மூர்த்தி. அவர் பீதாம்பரம் உடுத்திச் சதுர்புஜங்களுடன் விளங்கினர். ஓர் இளம் ஆலமரத்தின் அடியில் அம்மரத்தின் மேல் சாய்ந்துகொண்டு, தன் வலக்காலே இடது தொடையில் வைத்துக்கொண்டு கம்பீரமாய் என் பிரபு வீற்றிருந்தார். என் ஆண்டவர் இந்தப் பூலோகலீலையை முடிவுக்குக் கொண்டுவரத் திருவுளம் கொண்டுவிட்டார். என் பிரபுவின் மலர்ந்தமுகத்தில் ஆனந்தம் பொங்கியது. அன்பான விதுரா, அந்தச் சமயம் உலகெங்கும் ஆனந்தமாகச் சஞ்சரித்து வந்த, பராசரரின் சிஷ்யரும் வேதவியாசரின் அத்யந்த நண்பரும் மிகப்பெரிய பக்தரும் ஆன மைத்ரேயரிஷி அங்கு வந்து சேர்ந்தார். அவரது பக்தி ஆழமானது. அவர் மிகப்பெரிய ஆழ்வார். தன் யதாஸ்தானத்துக்குப் புறப்பட ஆயத்தமாக இருக்கும் என் ஆண்டவன் முன் வீழ்ந்து வணங்கினர். அப்பொழுது மிகவும் வருந்திக்கொண்டிருந்த என்னை என் ஆண்டவன் மிக்க கருணையுடன் பார்த்தார். அதனல் எனது மனக்கவலை எல்லாம் தீர்ந்தது. மைத்ரேய முனிவர் கேட்டுக் கொண்டிருக்க என் பிரபு என்னிடம் இங்ஙனம் பகர்ந்தார் :—

“அன்பு மிக்க உத்தவா! நீ முன் ஜன்மத்தில் வசுவாக இருந்தாய். உன் உள்ளத்தில் எழுகின்ற கவலே, பக்தி, பேருணர்ச்சி எல்லாம் எனக்குத் தெரிகிறது. முன் ஜன்மத்தில் நீ பிரஜாபதியின் யாகத்தில் என்னை வழிபட்டாய். ஆகையால் உனக்கு ஆத்மஞானம் அருளியிருக்கிறேன். அதன் மூலம் என்னை நீ நன்கு அறிந்துகொள்வாய். பக்தி இல்லாதவர்களுக்கு ஆத்மஞானம் ஒருநாளும் சித்திக்காது. பற்றற்றவனே! நீ எடுத்த ஜன்மங்களில் எல்லாம் இப்பொழுதுள்ள உன் பிறவி மிகவும் மேலானது. இந்தப் பிறவியில் நீ என்னுடன் சேர்ந்து வாழ்ந்துள்ளாய், எனது அருளைப் பெற்றுள்ளாய். இந்த மானுட லோகத்தைவிட்டு நான் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நீ வாழ்க்கைப் பயனை, மிக உயர்ந்த பயனைப் பெற்றுள்ளாய். நான் பூலோக லீலையை முடித்துக்கொண்டு யதாஸ்தானத்துக்குப் புறப்படும் நிலேயில் ஏகாந்தத்தில் என்னைத் தரிசித்துள்ளாய். நீ பாக்கியவான். அன்பான உத்தவா, முன்பு பத்மகல்பத்தில் சிருஷ்டியின் துவக்கத்தில்

எனது உந்திக்கமலத்தில் தோன்றியவனுகிய பிரம்மதேவனுக்கு எனது விபூதி, மகிமை, லீலை, நிஜசொரூபம் பற்றிய ஞானத்தை அருளினேன். அதைப் பக்தர்கள் 'பாகவதம்' என்கிருர்கள்.''

"அன்பான விதுரா! இங்ஙனம் மிகவும் அன்புடன் என் புருஷோத்தமனுல் பகரப்பட்ட இவ்வார்த்தைகளைக் கேட்டதும் என் உள்ளம் இளகியது, மயிர்க்கூச்சு எடுத்தது, வார்த்தைகள் குழறின. குரல் தழதழத்தது. என் கண்ணிரைத் துடைத்துக்கொண்டு இருகை கூப்பிக்கொண்டு என் ஆண்டவனிடம் இங்ஙனம் பகர்ந்தேன்: "என் பிரபு, ஆண்டவனே, உன் திருவடிகளைத் தொழுதார்க்குத் தர்ம அர்த்த காம மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்களைப் பெறுதல் எளிதாகிறது. ஆனுல் என் ஐயனே இவை ஒன்றையும் நான் விரும்பவில்லை. உன் திருவடிக்கு அன்பு செய்து பணிசெய்யவே விரும்புகிறேன். ஓ, புருஷோத்தமா! கர்மங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட பொருளாகிய நீ கர்மங்களைச் செய்வதைக் கண்டு ரிஷிகளும் ஞானிகளும் கூடத் தடுமாறுகிருர்கள். உன் நிஜ நிலையைப் புரிந்து கொள்ள முடியாமல் மயங்குகிருர்கள். பிறப்பற்ற, ஆதி அந்தமற்ற, பெரிய பொருளாகிய நீ ஒரு சரீரத்தில் பிறப்பு எடுப்பதும், உலகில் சகல ஜீவர்களுக்கும் அபயம் அளிக்கிற பெரிய பொருளாகிய நீ, காலகாலனுகிய நீ, உன் விரோதிகளுக்குப் பயந்து கோட்டைக்குள் போய் ஒளிந்து கொள்வதும், பற்றற்ற, ஆசை அற்ற பொருளாகிய, பரிசுத்தனுகிய நீ குடும்பம், ராஜ்யம், மனைவி, மக்கள் என்று உலக விவகாரங்களில் ஈடுபடுவதும் என்ன லீலை! என் ஆண்டவனே, நீ காலத்திஞல் மாசுபடுத்தப்படாதவன், பரிசுத்த ஆத்மா, பேரறிவுப் பொருள். நீ அனைத்தையும் அறிந்தவன். நீ அறியாதது ஒன்றுமில்லை. ஆயினும் என் பிரபோ 'உத்தவா இப்போது செய்யவேண்டியது என்ன?' என்று சில நெருக்கடியான சமயங்களில் கேட்பது என் அறிவை மயக்குகிறது. சர்வ வல்லமை வாய்ந்தவனே! உனக்கு மீளமுடியாத நெருக்கடி உண்டா? உனக்குச் சந்தேகம் உண்டா? என் ஆண்டவனே! நீ கிருபை கூர்ந்து உன் நிஜ சொரூபத்தைப் பற்றிய ஞானத்தை, அன்று பிரம்ம தேவருக்கு அருளிய ஞானத்தைத் தேவரீர்! நாங்கள் தகுதி வாய்ந்தவர் என்று கருதினல், எங்களுக்குப் போதித்தருளவேண்டுகிறேன். தங்களைப்பற்றிய மர்மம், ரகஸ்யம், மறைகளை நாங்கள் அறிந்து தெளிவு அடைவோம். பிறவித்துயர் தீர்த்துக்கொள்வோம்.''

அன்பான விதுரா! என் உள்ளக்கிடக்கையை இங்ஙனம் என் ஆண்டவனிடம் தெரிவித்ததும் அப்பரம்பொருள், என் பிரபு தன் சொருப லக்ஷணத்தை, ஆத்ம தத்துவத்தை எனக்கு விளக்கியருளினுர். அவரை நான் வழிபட்டேன். ஜகத்துக்கெல்லாம் குருவாகிய என் பிரபுவிடமிருந்து உயர்ந்த அந்த ஆத்ம ஞானத்தைப் பெறும் வழியையும் அறிந்துகொண்டேன். மீண்டும் மீண்டும் அப்பெரிய பொருளின் திருவடிகளைத் தொழுது அவரை வலம் வந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு இதோ இங்குவந்து நிற்கிறேன். அவரது பிரிவு என்னை வாட்டுகிறது. இச்சரீரம் பெரும் சுமையாய் இருக்கிறது. அன்பான விதுரா, என் ஆண்டவனின் கட்டளைப்படி இதோ பத்ரிகாச்ரமம் போய்க்கொண்டிருக்கிறேன். என் பிரபுவின் காட்சி, ஞானம் பெற்றது குறித்துத் திருப்தி அடைகிறேன். ஆயினும் என் ஆண்டவனின் பிரிவு எனக்குப் பெரும் துயரம் அளிக்கிறது. கந்தமாதன பர்வதமும் அதில் உள்ள பத்ரிகாச்ரமமும் என் பிரபுவுக்கு மிகவும் பிரியமானவைகள். கருணைக் கடலாகிய என் பிரபு ஆங்கு நரநாராயண ரிஷியாகத் தவம் செய்து கொண்டுள்ளார். மானுடவர்க்கத்தின் பேரில் உள்ள பெரும் கருணையினுல் அங்குக் கல்பகாலம் முடியும் வரை அவர் கடும் தவம் இயற்றிக்கொண்டிருப்பார். அவர் சர்வ காலமும் தவத்தில் இருக்கிருர்.

சுகதேவர் சொன்னுர்: அன்பான அரசனே! உத்தவரிடமிருந்து தன் குருவம்சத்தின், உற்ருர் உறவினரின் அழிவைக் கேட்டதும் விதுரருக்குப் பெரும் துயரம் உண்டாயிற்று. ஆனுல் அவர் தெளிந்த ஞானி ஆதலால் அத்துயரத்தை எல்லாம் அடக்கிக்கொண்டார். ஸ்ரீ கிருஷ்ணனுச்கு மிகவும் பிரியமானவரும் மிக உத்தமமான பக்தருமான உத்தவர் பத்ரிகாச்ரமத்துக்குப் புறப்பட்டபோது விதுரர் மிகவும் இனிமையாக, மிகவும் பிரியமாக இங்

னம் பேசினர்: என் ஆருயிர் உத்தவா! கடவுள் பக்தர்கள் உயிர் வாழ்வது உலக நன்மைக்காகவே ஆகும். நீ மிகவும் உயர்ந்த பக்தன். கண்ணனல் மிகவும் நேசிக்கப்பட்டவன். யோகேஸ்வரனகிய என் ஆண்டவனல் உமக்குச் சொல்லப்பட்ட அந்த ஆத்ம ஞானத்தை எங்களுக்கும் சொல்லுவீராக, புகட்டுவீராக. மிகவும் மேலான அந்த ஸ்ரீ வித்தையை, மது வித்தையை உமது தாசனகிய எனக்குப் புகட்டுவீராக!

உத்தவர் சொன்னர்: "என் அன்பான விதுரா, நீ மைத்ரேய முனிவரை வழிபட்டு அந்த ஆத்ம வித்தையைப் பெறுவாயாக. ஏனென்றல் என் ஆண்டவன் எனக்கு முன்பாகவே மைத்ரேய முனிவரிடம் உனக்கு இந்த மறைகளை எல்லாம் போதிக்கும்படி கட்டளை இட்டிருக்கிறன். ஆகையால் என் அன்பான விதுரா, உனக்கும் ஆண்டவன் அருள் உண்டு. அவனே உனக்குப் புகட்டும்படி கட்டளையிட்டருளியுள்ளான். ஆகவே என்னிடமிருந்து நீ ஆத்ம வித்தையைப் பெறுவது பொருந்தாது. மைத்ரேயரைச் சந்தித்து, அவரை வழிபட்டுப் பெறுவாயாக."

சுகதேவர் சொன்னர்: "அன்புள்ள அரசனே, இங்ஙனம் உத்தவருக்கும், விதுரருக்கும் இடையில் உயர்வான சம்வாதம் நடந்தது. அதனல் உத்தவர் மிகவும் ஆறுதல் அடைந்தார். அமிர்த மயமான கடவுளைப் பற்றிய சம்பாஷணையில் அவர் மனம் லயித்துப் போனதால் அன்றைய இரவு ஒருக்ஷணம் போன்று கடந்து விட்டது. யமுனநதிக்கரையில் இங்ஙனம் ஓர் இரவைக் கழித்துவிட்டு உத்தவர் மறுநாள் விடியற்காலம் பத்ரிகாச்ரமத்திற்குப் புறப்பட்டுப் போனர்.

பரீக்ஷித் கேட்டதாவது: மிகப் பிரசித்தமான, வல்லமையான விருஷ்ணிகளும், போஜர்களும் ரிஷிகளின் சாபத்தால் அனைவரும் அழிந்து போயினர். என் ஆண்டவன் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் மானுட சரீரத்தைத் துறந்துவிட்டு யதாஸ்தானத்துக்குப் போய்விட்டார். இங்ஙனம் அனைத்தையும் துடைத்துத் தள்ளிய பரமன் எதற்காக உத்தவரை மட்டும் உலகில் விட்டுச் சென்றர்?

சுகதேவர் சொன்னர்: அன்பான அரசனே! முனிவர்கள் சாபம் என்பது வெறும் பெயரளவிலேயேயாம். காரண காரியம், முகாந்திரம், சூழ்நிலை எல்லாம் என் ஆண்டவனின் திருவுளப்படியே ஏற்படுகின்றன, நடக்கின்றன. ஆக்குபவனும் அவனே, அழிப்பவனும் அவனே. அவனுடைய திட்டம் ஒருநாளும் தவருது. மிகவும் அதிகமாகப் பெருகிப்போன தன் வம்சத்தை, செல்வாக்கு, பலம் இவைகளில் மமதை கொண்டுவிட்ட தன் இனத்தைத் துடைத்துவிட்டுத் தானும் இம்மானுடலோகத்தை விட்டுப் புறப்படத் தீர்மானித்தார். அங்ஙனமே செயல்படுத்தினர். ஜீவர்கள்பால் பேரன்பு, பெருங்கருணை கொண்ட ஆண்டவன் தனது பிரதிநிதியாக உத்தவரை இந்தஅநித்திய உலகத்தில் விட்டுச் சென்றர். "அவன் ஒருவனே ஆத்ம ஞானத்துக்குத் தகுந்தவன், பேரறிஞன். அவன் எல்லா விதங்களிலும் எனக்கு நிகரானவன். இவ்வுலகப்பற்று ஏதும் சிறிதும் இல்லாதவன். ஆகையால் தெய்வத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஞான விளக்காக, இவ்வுலகில் அவன் இருந்து வரட்டும். மக்கள் அவனைப் பார்த்து அருள் வாழ்க்கைக்கு ஈர்க்கப்படுவார்கள். அவனிடமிருந்து ஞான விஷயங்களைக் கேட்டறிவார்கள்" என்று எண்ணி என் ஆண்டவன் உத்தவரை இவ்வுலகில் விட்டுச் சென்றன். வேதங்களைத் தோற்றுவித்தவன், இவ்வுலகுக்கு ஆசான், இவ்வுலகில் அருள் விளக்கு என்றும் மங்காது எரியச் செய்வதற்காக உத்தவரை பத்ரிகாச்ரமத்துக்குப் போகப் பணித்தருளினர். ராஜ பரம்பரைகள், ராஜ குலங்கள், வம்சங்கள் எல்லாம் அழிந்துவிடுகின்றன. ஆனல் வாழையடி வாழையெனவரும் அடியார் திருக்கூட்டத்தை அவனே காத்தருள்கிறன். ஆண்டவனல் பணிக்கப்பட்டபடி பத்ரிகாச்ரமம் சென்று ஆங்கு உத்தவர் ஸ்ரீ ஹரியை வழிபட்டு யோகத்தில் நிலைபெற்றிருந்தார்.

ஸ்ரீ கிருஷ்ண கர்ணமிர்தம், ஸ்ரீ கிருஷ்ண லீலை, ஸ்ரீ கிருஷ்ணவேணி, ஸ்ரீ கிருஷ்ண கானம் இனிமையானது, புனிதமானது, மங்களகரமானது, தெய்வீகமானது. அவன் விளையாட்டாக மானுட சரீரம் எடுத்ததும், முடிவில் அதை விளையாட்டாக விட்டதும் எவ்வளவு ரம்மியமானவை. அவை ஞானியின் ஞானத்தைத் தெளிவுபடுத்துகின்றன, உறுதிப்படுத்துகின்றன. உலகப்பற்று நிறைந்தவர்களுக்கோ அவை சுவையற்றவையாக இருக்கின்றன. குரு வம்

சத்திலேயே நலிசிறந்தவனே, உத்தவர் மூலம் தான் ஆண்டவனுல் அன்புடன் நினைக்கப்பட்டதைக் கேட்டதும் விதுரனுக்குப் பேரன்பு பொங்கி எழுந்தது, கண்ணீர் மல்கியது. உத்தவர் தன்னைப் பிரிந்துபோவதைப் பொறுக்க மாட்டாமல் அவர் அழுதார். உத்தம ஞானியாகிய, பற்றற்ற துறவியாகிய விதுரர் ஸ்ரீ கிருஷ்ண ஸ்மரணையிலேயே பலநாட்கள் இவ்வுலகில் சஞ்சரித்தார். அவர் உடல் நடமாடியது. மனது கிருஷ்ண ஸ்மரணையில் நிலைத்திருந்தது. இந்த நிலையில்தான் ஒரு நாள் பெரிய முனிவராகிய மைத்ரேயரை விதுரர் கங்கைக் கரையில் சந்தித்தார்.

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 5

சுகதேவர் சொன்னுர்: —ஞானசொரூபியாகிய மைத்ரேயர் அப்பொழுது ஹரித்வாரத்தில் இருந்தார். பக்த விதுரர் மிகவும் பணிவுடன் அவரிடம் போனுர். முனிவர்களுக்குள் அவர் சிரேஷ்டமானவர், அன்பும் அடக்கமும் நிறைந்தவர். ஆகையால் விதுரருக்கு மைத்ரேயரிடம் பேரன்பு உண்டாயிற்று. விதுரர் மைத்ரேயரிடம் இங்ஙனம் பகர்ந்தார்:-தேவே! மக்கள் சந்தோஷம்—ஆனந்தம் பெறுவதற்காகவே இவ்வுலகில் ஓயாது பாடுபடுகிருர்கள், உழைக்கிருர்கள். ஆனுல் அக்கர்மங்களோ,முயற்சியோ அவர்களுக்கு மகிழ்ச்சியையும் தருவதில்லை; துயரங்களிலிருந்து மீட்பதும் இல்லை. சுகப் பிராப்தியும் இல்லை, துக்க நிவர்த்தியும் இல்லை. அவர்களுடைய துக்கங்களே வளர்கின்றன. இதுதான் இவ்வுலக அமைப்பு. இத்தகைய உலகத்தில் ஐயனே நாங்கள், மக்களுக்குச் செய்ய வேண்டியது என்ன என்பதை விளக்கி அருள்வீர்களாக! என் ஆசாரியரே! யாருக்குக் கடவுள் பக்தி இல்லையோ, யாருக்குத் தீவினைப்பயன்கள் அதிகமோ அவர்களே துன்பப்படுகிருர்கள். யாருக்குக் கடவுள் பக்தி இருக்கிறதோ, யார் உலக நன்மையைக் கருதுகிருர்களோ அவர்கள் பிறருக்காகவே, கடவுளுக்காகவே வாழ்கிருர்கள். அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் தியாகம், யக்ஞ மயமாக அமைகிறது. தேவே! தங்கள் வாழ்க்கை இத்தகைய யக்ஞ ஆகுதி, தியாக வாழ்க்கை ஆகும். நீங்கள் உலகில் சஞ்சரிப்பது பக்தி இல்லாது உலகில் துன்பப்படும் மக்களுக்கு உதவுதல் பொருட்டே ஆகும். துறவியர்களுள் உத்தமமானவரே எங்களுக்கு நல்வழி, பக்தி சாதனத்தைப் புகட்டி அருளுவீராக. ஜீவர்கள் உள்ளத்தில் சதாகாலமும் உறையும் கருணைகரனை உணர்தல் ஒன்றே ஜீவிதத்தின் உயர் நோக்கமாகும். ஆண்டவன் அடியார் எண்ணத்தில் உள்ளான். அவனை நினைக்குந்தோறும் அவன் அங்கே எழுந்தருள்கிருன். நமக்கு நல்வழி காட்டியருள்கிருன். சதா நம்மை நல்வழியில் தூண்டிக் கொண்டிருக்கிருன். அவன் அருளால் அன்றி அவன் தாள் வணங்க முடியாது. மறைத்தலும் அவன் செயலே, அருளலும் அவன் செயலே. ஆண்டவன் எப்படி அவதரித்து வருகிருன், அவன் எங்ஙனம் பற்றற்றுக் கர்மம் புரிகிருன், எங்ஙனம் சிருஷ்டி, ஸ்திதி, ஆகிய கிருத்தியங்களைச் செய்து வருகிருன் என்பதையும்,இந்தப் பிரபஞ்சத்தின் மேலான ரகஸ்யம், தத்துவங்களை எங்களுக்குப் புகட்டியருளுவீராக.

தேவே! ஆண்டவன் இப்பெரிய புவனத்தைப் படைத்து அதற்கு அப்பால் இருந்து கொண்டு யோக நித்திரையில் எங்ஙனம் தன்னில் தானுய் இருந்து வருகிருன் என்பதை விளக்கி அருளுவீராக! இந்த அண்டங்கள் யாவும் ஆண்டவனின் சிதாகாசத்தில் எங்ஙனம் நிலைபெற்றிருக்கின்றன? யோகேஸ்வரனுகிய ஆண்டவன் எங்ஙனம் பிரம்மா முதலிய ஈஸ்வர கோலங்களை ஏற்கிருன் என்பன போன்ற அதி சூக்ஷ்மமான மேலாம் உண்மைகளை எங்களுக்குப் புகட்டியருளுவீராக. என் ஆண்டவனின் புகழை எவ்வளவு கேட்டாலும் சலிப்பதில்லை, ஆர்வமே மேலிடுகிறது. அவனது மகிமைகளை, விபூதிகளைக் கேட்க கேட்கப் பக்தி வளர்கிறது. அதில் கலந்துவிட உள்ளம் விழைகிறது. ஆண்டவனின் கவர்ச்சி, ஆட்கொள்ளும் தன்மை, அருள்சக்தி அத்தகையது.

தேவே! என் ஆண்டவன் மச்சாவதாரத்தில் என்ன லீலைகள் புரிந்தான்? எப்படி நல்லவர்களுக்கு அவன் துணை செய்தான்? இந்த ஜகத்தின் பிதாவாகிய ஸ்ரீமந் நாராயணன் இவ்வுலகில் வேற்றுமைகளை எப்படித் தோற்றுவித்தான் என்ற உண்மைகளையும் உயிர்களிடத்தில் ஆசாபாசத்தை எப்படித் தோற்றுவித்தான் என்பதையும்எங்களுக்குஎடுத்துச்சொல்வீராக!

ஸ்ரீ யோக வாசிஷ்டம்

(திரு V. S. நரசிம்மன்)

குருகுலக் கல்வி முற்றுப் பெற்றபின், சிறிது காலம் அரண்மனையில் ஸ்ரீ ராமன் ஆனந்தமாகக் கழித்தான். அதன்பின் தீர்த்த யாத்திரை செய்து புதிய இடங்களையும், ஆசிரமத்தில் வசிக்கும் பெரியோர்களையும் தரிசிக்க வேண்டும் என்ற அவா அவனுக்கு ஏற்பட்டது. தந்தையின் அனுமதி பெற்று, அநேக இடங்களைக் கண்டு திரும்பினான். அதன் பிறகு பதினாறு வயது முற்றுப் பெறாத வாலிபனாகிய ஸ்ரீ ராமன் கோடை காலத்தில் நீர் நிலைகள் வற்றுவது போல் இளைத்தான். (कार्श्यं शरदीवामलं सरः) சிந்தனை வசப்பட்டவனாக எத்தொழிலைச் செய்வதிலும் விருப்பம் அற்று, எதுவும் பேசாது அமைதியாக அரண்மனையில் இருக்கலானான். ராமனுடைய (तूष्णीं भावं) தூஷ்ணீ பாவம்) பேசாது இருக்கும் நிலை வைராக்கியத்தின் முதல் அறிகுறியாகும். போர்க்களத்தே தன்னுடைய தர்மம் யாது என அறியாது தத்தளித்துக் கிருஷ்ணனைச் சரண் புகுந்த பார்த்தனும் இவ்வண்ணம் பேசாது இருந்தான். 'न योत्स्य इति गोविन्दंउक्त्वा तूष्णीं बभूव ह" (கீதை: II-9)

விச்வாமித்திரர் வருகை:

அந்தச் சமயம்அயோத்திக்கு மகரிஷி விச்வாமித்திரர் வருகை புரிந்தார். தசரதன் அவரைப் பணிவுடன் வரவேற்று, தக்க மரியாதைகளைச் செய்தார். "அனைவராலும் வணங்கத் தகுந்த பெரியோய், உமது வரவால் நான் புனிதமடைந்தேன். தாங்கள் என்னிடம் வேண்டுவது யாது? நான் தங்களுக்காக ஆற்ற வேண்டிய பணி யாது?" என்று வினவினார். அரசனுடைய மொழியைக் கேட்ட ரிஷி கூறினார்: "நான் செய்து வருகின்ற யாகத்தை அரக்கர்கள் குலைக்கின்றனர். அதைக் காக்க அருங் குணங்கள் உடையவனும், வீரத்தில் சிறந்தவனும் ஆகிய உனது புதல்வன் ராமனைத்தா." (इमं रामं महात्मानं पुत्रं ते दातुमर्हसि)

முனிவரது சொற்களைக் கேட்டதும், தசரதன் புத்திர பாசத்தால் மனம் கலங்கினான். அவனது தயக்கத்தைக் கண்ட முனிவரும் கோபம் கொள்ளலானார். ஆயின் வசிஷ்ட முனிவர் அரசனது கலக்கத்தைப் போக்கினார். 'அரசனாகிய நீயே கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லை எனில், எவர்தான் சத்தியத்திற்குக் கட்டுப்படுவார்? ராமனுடைய மேன்மைக்காகவே விச்வாமித்திரர் இங்கு வந்துள்ளார். கவலையை விட்டொழித்து ராமனை அவருடன் அனுப்பு".

வசிஷ்டருடைய மொழிகளால் மனம் தெளிந்தான் தசரதன். "தற்போது ராமனுடைய நிலை கவலைக்கு உரியதாக உள்ளது. தீர்த்தயாத்திரை முடித்த பிறகு ராமனிடம் விசித்திரமான மாற்றம் தோன்றியுள்ளது. சோகத்தில் ஆழ்ந்து இருக்கின்றான். "அனைத்தும் அநித்தியம் என்று மொழிந்து, தனித்து அமைதியற்ற உள்ளத்தோடு காணப்படுகின்றான்." இவ்வாறு ராமனுடைய வேலைக்காரர்கள் தெரிவித்தனர். அவர்களுடைய வர்ணனையைக் கேட்ட விச்வாமித்திரர் ராமனுடைய சோகத்திற்குக் காரணம் யாது என்பதை ஊகித்துணர்ந்தார்.

"அவ்வாறு எனின் அறிவிற் சிறந்த ராமனை உடனே இங்கு அழைத்து வா. அவனது மோகம் ஆசையாலோ, ஆபத்தாலோ விளைந்தது அன்று. (காதலினால் ஆபத்தால் கலந்தது அன்று). விவேகமும், வைராக்கியமும் உள்ளத்தே தோன்றியதால், போதம் (ஞானம்) உதயமாவதன் அறிகுறியாகும். (विवेकवैराग्य वतो बोध राव महोदयः) சிறந்த யுக்தியால் மோகம் களையப்பட்டால் மேலான சாந்தியை அவன் அடைவது திண்ணம்".

அவரது ஆலோசனையின்படி அவைக்கு அழைத்துவரப்பட்ட ராமன் தந்தையையும், முனிவர்களையும் வணங்கினான். வேலையாட்கள் அவன் அமர ஒரு பாயை விரித்தனர். அதில் உட்கார்ந்தான். தந்தையும், முனிசிரேஷ்டர்களும் அவன் மனக் கவலைக்குக் காரணம் யாது? என வினவினர். "கலக்குறு பேதையர்க்கு உரித்தாம் மடம் செறி மோகக் கடலில் கவிழேல்", எனவும், "நன் மனையை எலி நலியு நலிவு போல அலக்கண் உறு காரணம் என்?" என்றும் முனிவர்கள் கேட்டனர்.

ஸ்ரீ ராமன் தன் மனக்கவலைக்குக் காரணத்தை விளக்கமாகக் கூறத் தொடங்கினன்.

3. जीवितं दुःखमयम् வாழ்க்கை துன்பமயமானது.

ஞானம் ஒன்றில்லாச் சிறியேன் ஆயினும், என்னால் சிறிது தீவிரமாக விசாரம் செய்யப் பட்டது. அதன் மூலம் நான் அறிந்ததை உரைக்கின்றேன். வாழ்க்கை என்பதே பிறப்பதும், இறப்பதுமாக உள்ளதே! தோன்றியவர் மரிக்கின்றனர்; மரிப்பதோ மறுபடியும் பிறப்பதற்கே! (**जायते मृतये लोको म्रियते जननाय च** ஜாயதே ம்ருதயே லோகோ, ம்ரியதே ஜனனாயச) "இந்த நெடும் ஜக மோகத்து இச்சை எல்லாம் தீர்ந்தது. இதில் இன்பமில்லை—அந்தமுறல் பிறப்பதற்கே, பிறப்பது மீண்டும் இறப்பதற்கே,அநித்தியம் யாவும்."

பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் பகவான் ஒரு கருத்தைக் கூறுகின்றார். "பண்டிதர்களுக்கு இரண்டு வகையான மனிதர்களைப் பற்றிக் கவலையில்லை—ஒருவர் 'மூச்சுப் போனவர்.' அடுத்தவர் 'இன்னும் மூச்சுப் போகாதவர்' கதாஸின், அகதாஸின்! உலகில் எது பெரிய சத்தியம்? பிறந்த மனிதன் கட்டாயம் மரணமடைவான் என்பதே!எனவே மரணமடைந்தவர், இன்னும் மரணமடையாதவர் என்று இருபிரிவுகள் உள்ளன. இதில் 'ஜீவிக்கின்றவன்' என்று கூறப்படவில்லை. இந்தக் கருத்தையே ராமனும் உரைக்கின்றான்.

"பார்க்கின்ற அனைத்தும், அசைகின்ற, அசைவற்ற எல்லாமும் நிலையற்றவை. (**अस्थिराः** அஸ்திரா:) எனக்கு ராஜ்யத்தால் என்ன பயன்? போகங்களால் என்ன சுகம்? நான் யார்? தோற்றமாகின்ற இவை அனைத்தும் எப்படி வந்தன? தீவிரமாக நான் விசாரம் செய்தேன். அதனால் வழிப்போக்கனுக்குக் கானல் நீர்மேல் விரக்தி ஏற்படுவது போல், அனைத்து வஸ்துக்களின் மீதும் எனக்கு வெறுப்பே மேலோங்கியது. இந்தத் துக்கத்தை எப்படிப் போக்குவது என்ற சிந்தையால் உள்ளம் வேகின்றேன். கருணையுள்ள ரிஷியே, செல்வம் ஒன்றினால் இன்பம்அடையமுடியாது; வெறும் மயக்கத்தையே அது உண்டாக்குகின்றது.

மக்களால் நிந்திக்கப்படாத செல்வந்தன், தன்னுடைய பெருமையைப் பறை சாற்றாத வீரன், எல்லாரையும் சமமாகப் பாவிக்கும் தலைவன்—இம்மூவரும் காண்பதற்கு அரியவர்கள்.

புல்லின் நுனியில் இருக்கும் நீர்த்திவலை போல் ஆயுள் நிலையற்றது; காற்றினைக் கட்டலாம், ஆகாசத்தைப் பகுதிகளாகத் துண்டிக்கலாம், அலைகளை ஒன்றாகச் சேர்த்துக் கோர்த்துவிடலாம்; ஆனால் என்றும் அழியாத ஆயுளோடு இருப்பது என்பது இயலாத ஒன்று! (ஆகாயத்தைப் பிளவிட, வாயுவைப் பிடிக்க, திரைகோக்க எளிது; இவற்றைப்பேணஒண்ணு)

செடி, கொடிகளும் வாழ்கின்றன; மிருகமும், பறவையும் கூட வாழ்கின்றன; ஆயின் மனனம் செய்து (ஆத்ம விசாரம்)எவன் வாழ்கின்றானோ அவனே வாழ்பவன். உலகில் நல்வாழ்வு வாழ்ந்து, இனியும் பிறப்பு எடுக்காத நிலையோடு இருப்பவர்களே வாழ்கின்றவர்கள். ஏனையோர் வயதாகிய கழுதைகளே. (**जरठगर्दभा** ஒழிந்த வெல்லாம் இழவேசரிப் பிறப்பாம்)

விவேகம் இல்லாதவனுக்குச் சாஸ்திரம் பாரம்; ஆசையில் ஆழ்ந்தவனுக்கு ஞானம் பாரம்; சாந்தியற்றவனுக்கு மனம் பாரம்; ஆத்ம ஞானம் இல்லாதவனுக்கு உடல் பாரம்.

அஹங்காரத்தினால் ஆபத்தும், மனக்கிலேசமும், ஆசையும் உண்டாகின்றன. ஆணவத்தை மிஞ்சிய எதிரி வேறு எதுவுமில்லை. கிராமத்துத் தெருக்களில் குறிப்பேதும் இல்லாது ஒரு நாய் ஓடித்திரிவது போல், மனமானது தன் வசமற்று வீணே இங்கும் அங்கும் அலைகின்றது. (அதிதூர நகர் நாய் போல் வாளாச் சுற்றும்) செல்வம் எவ்வளவு கிடைத்தாலும், சிறிதளவும் மனம் திருப்தி பெறுவதில்லை. பூக்கூடையில் தண்ணீரை எவ்வளவு ஊற்றினாலும், அது எப்பொழுதாவது நிரம்புமா? (ஆமது கிஞ்சிலும் கிடையாது, அருநிதி பெற்றாலும் மகிழ்ந்து அமைந்து உட்கொள்ளாச் சேமமுறு காண்டகம் நீர் தரியா போற்றியும் மனம் தீயதன்றே) கடலைப் பருகுவதிலும், மேரு மலையை அடியோடு பேர்த்து எடுப்பதிலும், சுடர்கனலை விழுங்குவதினும் சிரமமான காரியம் மனதைக் கட்டியாளுவதாகும்.

சம்சாரத்தில் உள்ள குறைகளில் ஆசை ஒன்றுதான் அதிகத் துன்பத்தைத் தருகின்றது.

सर्व संसार दोषाणां तृष्णैका दीर्घ दुःखदा । ஆசை இதயத்தில் உறுதியாக இடம் பிடித்தால், வச்சிரத்தின் முனை, கூரிய வாள், கொழுந்து விட்டெரியும் நெருப்புப் பொறி-இவற்றைக் காட்டிலும் கொடியது. மேருமலையைப் போன்ற ஞானியையும், சூரனையும், உறுதியாக இருப்பவனையும் கூட நொடிப்பொழுதில் துரும்பாக மாற்றி விடுகின்றது. ।तृणीकरोति तृष्णैका निमेषेण नरोत्तमम् । (கனவிடியின் முனை, கூர்வாளும், வெந்த இருப்புப் பொறியும் எனக் கொடிய மனவேட்கை, மேருவொத்தோர் சுந்தர ஞானியர் தீரர் சூரரையெல்லாம் இமைப்பில் துரும்பு செய்யும்.)

4. वयोवस्थाः दुःखदाः வாழ்க்கை நிலைகள் துன்பமயமே

தேகம் உலக வியவகாரத்திற்குரியது; ஆயின் அதன் அனுபவங்கள் யாவும் துக்கத்தையே அளிக்கின்றன; தேகத்தைப்போல் பயனற்றதும், பெருமையற்றதுமாகிய பொருள் வேறு எதுவும் இல்லை. அளவற்ற செல்வம், பரந்த அரசு, கட்டான உடல் — இவற்றால் என்ன பயன்? ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இவை அனைத்தும் காலத்தினால் அழிக்கப்படுகின்றன அல்லவா? (விதியில் வரும் காலனாற் சில நாளில் இவை யெல்லாம் வீழ்ந்துபோகும்)

உதிரமும், மாமிசமும் நிறைந்துள்ள இவ்வுடல் நாசத்தையே தர்மமாகக்கொண்டது. இக்காயத்தில் அழகு என்ன உள்ளது?

சக்தியின்மை, தளர்ச்சி, பசியும், தாகமும் பீடித்தல், பேச இயலாத தன்மை, அறியாமை, கவர்ந்துகொள்ளும் ஆசை, அமைதியின்மை, மற்றவரைச் சார்ந்து வாழும் நிலைமை—இவை பால்யப் பருவத்தின் நிலைகள் ஆகின்றன. மலத்தில் புரண்டு அழுகின்றது சிறு குழந்தை. அழுக்கில் நாய் புரள்வது போன்ற நிலைதானே இதுவும்? குழந்தைப்பருவத்தில், தாய், தந்தை, குரு ஆகியோரிடம் பயமே மேலோங்குகிறது. பெரியவர்களை, தன்னிலும் மூத்த குழந்தைகளைக் கண்டால் அச்சமே தோன்றுகின்றது.

யௌவனப் பருவத்தில் அறிவு விசாலமாகத் தெளிவாகத் தூயதாக இருப்பினும், மழைக் கால நதிநீர் கலங்குவது போல், சித்தமும் கலக்கம் அடைகின்றது. மேலும் யௌவனம் சிறப்புற ஓங்கி வளரும்போது காமமும் தீவிரமடைகின்றது. இறுதியில் நாசமே விளைகின்றது. யௌவனத்தால் விளையும் துயர்களை எல்லாம் எளிதில் யார் கடந்து செல்கின்றாரோ அவரே மகாத்மா; உலகில் உள்ளோர் அனைவராலும் வணங்கத் தக்கவர்.

சரீரமாகிய கூடு நரம்புகள், எலும்புகள், தசைகளால் உண்டாக்கப்பட்ட பாவையைப் போலன்றோ உள்ளது? இதைப்பிரித்துப் பார்ப்பவர் என்ன சிறப்புக் காண்பர்? தனித்தனியே இவற்றைப் பிரித்துக் காண்; அதில் இன்பம் எதுவும் தோன்றுமா? காமத்திற்கு இடம் அளிக்கும் பெண்ணையோ ஆணையோ துறந்தால் சுகமே விளையும். பால்யப் பருவம் நிறைவுடைத்தன்று; அதனை யௌவனம் எடுத்து விழுங்குகின்றது; யௌவனத்தை மூப்பானது விழுங்கும்.

மூப்பிலே தளர்வும், சோர்வும் மேவிட்டுக் குணமும் பராக்கிரமும் குன்றிவிடுகின்றன;எனினும் கர்மங்களில் ஆசை பெருகுகின்றது. அவற்றை நிறைவேற்றும் சக்தியோ அவனிடம் கிடையாது. (கரையுறு கருமந்தன்னில் வலியின்மை). அனுபவிக்க முடியவில்லையே என்ற இயலாமை அவன் இதயத்தை எரிக்கும்— हृदयं दह्यते नूनं शक्तिदौर्बल्येन वार्धके ।

சூதாட்டம்

சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது. பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச் சீட்டு என்னும் சூதாட்டத்தையும், குதிரைப் பந்தயம் என்னும் சூதாட்டத்தையும் செய்து வருகிறார்கள். நல்லார்கள் இத்தீங்குகளினின்று விலகி இருப்பார்களாக. பொது நலனுக்காக வென்றும் இவைகளில் ஈடுபடலாகாது.

பத்ராசல ராமதாசர் சரிதம்

பாரதத்தின் ஆந்திர மாகாணம் கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளால் செழிப்புற்று விளங்குகிறது. ஆங்கு வாழும் மக்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளார்கள். ஆங்கு விவசாயம் முக்கியத் தொழில். அப்பிரதேசத்தை முன்பு கிருஷ்ண தேவராயர் என்னும் அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் புலவராகவும் விளங்கினார். அம்மாகாணத்தில் 'கொள்ளகொண்ட பள்ளம்' என்னும் ஊர் அழகு பொருந்தியதாக அமைந்திருக்கிறது. அவ்வூரைச் சூழ்ந்து மருதநிலம் அமைந்துள்ளது. இயற்கை அழகு மக்களின் மனதைக் கவர்வதாக இருந்தது.

அவ்வூரில் லிங்கன்னா என்னும் ஓர் அந்தணர் இருந்தார். மக்களால் போற்றக்கூடிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார். கமலாம்பாள் என்னும் உத்தமி அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்திருந்தாள். அவர்களுக்கு ஓர் ஆண்மகவு வாய்த்தது. அம்மகவுக்குக் கோபன்னா என்னும் பெயர் சூட்டினார்கள். கல்விப் பருவம் வந்ததும் கோபன்னா பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பள்ளியில் அவர் திறமை மிக்க மாணவராக விளங்கினார்.

இராமாயணப்பாராயணம் ஓரிடத்தில் நடந்துவந்தது. கோபன்னா ஆங்குச் சென்று ராமாயணத்தை மிகுந்த கவனத்துடன் கேட்டு வந்தார். அதன் விளைவாக அவருக்கு ராம பக்தி உண்டாயிற்று. அவருடைய மனதில் ராமனிடம் பக்தி உறுதியாக நிலைபெற்றது. அவர் சிறுவயதாக இருக்கும்பொழுதே தந்தையும் தாயும் காலமாகிவிட்டனர். பெற்றோர்கள் வைத்திருந்த பூஜைப் பெட்டியைத் தமக்குக் கிடைத்த ஐஸ்வரியம் எனக் கருதினார். நாள்தோறும் ஸ்நானம் செய்து பெட்டியிலுள்ள விக்ரகத்துக்குப் பக்தி சிரத்தையுடன் பூஜை செய்து வந்தார். அவர் ராமரைப் பார்த்துப் பிரார்த்தித்ததாவது: "கோதண்ட ராமா! உன் அன்பின் போக்கை என்னால் அறிந்துகொள்ள முடியாது. உன் அன்புக்குக் குகன் பாத்திரமானான். நீ குகனிடத்தில் செலுத்திய அன்பை என்மீது காட்டக் கூடாதா? நீ எனக்கு என்ன ஆணையிடுகின்றாயோ அதைச் செய்ய நான் ஆயத்தமாக இருக்கின்றேன். இவ் அகிலமும் நீயே."

கோபன்னாவின் பக்தியைச் சோதிக்கக் கபீர்தாசர் அவரிடம் வந்தார். கோபன்னா குளக்கரையில் அமர்ந்து தியானம் பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலிருந்த பூஜைப்பெட்டியைக் கபீர்தாசர் எடுத்துக்குளத்தில் மறைத்து வைத்து விட்டார். கோபன்னாவின் தியானம் கலைந்தபொழுது பூஜைப்பெட்டி அவ்விடத்தில் இல்லாததை அறிந்தார். கோதண்ட ராமா, உன்னுடைய விக்ரகம் இருந்த பூஜைப்பெட்டி வாழையடி வாழையாக என் முன்னோர்கள் காப்பாற்றி வந்ததாகும். நானும் அதைப்பெரும் பொக்கிஷமாகக் கருதிப் பாதுகாத்து வந்தேன். இவ்வையகமும் வானகமும் அதற்கு ஈடு ஆகா. அது ஒன்று இருந்தால் எனக்குப் போதும். அது எனக்குத் தவிர மற்றவர்களுக்குப் பயன்படாது. ராமா, ஏன் என்னை இவ்வாறு சோதிக்கின்றாய்? உன் திரு உருவத்தை என் உயிர் போன்று பாதுகாத்து வந்தேன். பூஜைப்பெட்டி மறைந்தால் என் உயிர் மாயும் என்பதை நீ அறியாயோ? இவ்வளவு நாள் செய்து வந்த பூஜைக்கு இதுதானா கைம்மாறு!" என்று உருக்கமாகப் பிரலாபித்தார். கபீர்தாசர் அவரிடம் சென்று "உன்னைப் பார்த்தால் பெரும்பொருளை இழந்தவன் போன்று தென்படுகின்றாய். உண்மையைச் சொன்னால் என்னால் முடிந்த உதவியைச் செய்கின்றேன்' என்றார். "என் பூஜைப் பெட்டி காணாமல் போய்விட்டது. அதைக் குறித்துத் தான் நான் புலம்புகிறேன்" என்றார். "விக்கிரகம் முக்கியமா? நீ வழிபடும் கடவுளாகிய ராமபிரான் முக்கியமா? உன் விக்கிரகம் தங்கத்தின் நிறத்தை உடையது. ராமனின் நிறம் நீலம். எனவே அந்த விக்கிரகம் போனால் நீலநிறமுடைய மற்றொரு விக்கிரகத்தை நீ வழிபாட்டுக்கு வைத்துக்கொள்ளலாம்" என்றார் கபீர்தாசர். "அறிவின்மிக்கோரே, என்முன்னோர் காப்பாற்றி வைத்த பூஜைப்பெட்டியே எனக்கு மிகவும் உயர்வாகத் தோன்றுகிறது. நான் மீண்டும் அதைப் பெறுவதற்கு நீங்கள் கிருபை

செய்யுங்கள். அப்பெட்டியை நான் பெருவிட்டால் இறந்துபோவேன்'' என்ருர் கோபன்ன. ''பக்தியை வளர்ப்பவர் ஸ்ரீ ராமனே அன்றி மனிதன் செய்த விக்கிரகம் அன்று. ஆனலும் உருவ வழிபாட்டுக்கும், பக்குவம் அடையாத வர்களுக்கும் விக்கிரகம் தேவைதான். ஒரு விக்கிரகம் போய்விட்டால் மற்ரெரு விக்கிர கத்தைத் தேடிக்கொள்ளலாம். முன்னேர் களின் சொத்து பத்திரமாகக் காக்கக்கூடியது என்ற கொள்கை மிகவும் மேலானதே. அதை யார் எடுத்துக்கொண்டு போய் இருப்பார்? உன் அசிரத்தையால் எங்கேயோ வைத்திருப் பாய். நீ உண்மையான பக்தி வைத்திருப்பா யானல் ராமனை மும்முறை அழை. ஸ்ரீ ராமன் உன் பக்திக்குக் கட்டுப்படுவாரானல் பூஜைப் பெட்டியுடன் உன்னிடம் வருவார்'' என்று கபீர்தாசர் கூறினர். கோபன்ன மூன்றுமுறை மனமுருகி ராமனை அழைத்துப் பார்த்தார். ராமபிரான் வரவில்லை. கோபன்ன பெரும் துயரத்துக்கு ஆளானர். கபீர்தாசர் கோபன் னவை நோக்கிப் பகர்ந்ததாவது: ''பக்குவம் இல்லாத பக்திக்கு ராமபிரான் கட்டுப்படமாட் டார். உன் வருத்தம் தீருகின்ற முறையில் நான் அவரை வரவழைக்கின்றேன்'' என்று கூறி ராமநாமத்தை மூன்று முறை உருக்கத் துடன் கூறினர். ஆங்கிருந்த தடாகத்தினின்று பூஜைப் பெட்டியுடன் ராமபிரான் தோன்றி அவர்கள் முன்வந்தார். இதைப் பார்த்ததும் கோபன்ன கபீர்தாசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். ''பெருந்தகையீர்! நான் ராம பிரானின் உண்மைத் தொண்டன் அல்லன் என்பது வெளியாயிற்று. ஸ்ரீ ராமனின் மெய்த் தொண்டர் தாங்களே ஆவீர்கள். எனது தீராத வல்வினையைப் போக்கி அருளுவீராக. எனக்கு உபதேசம் செய்து ராமபிரானின் அரு ளுக்கு என்னைப் பாத்திரம் ஆக்குவீர்களாக. நான் உங்களிடம் அடைக்கலம் புகுந்தேன். என்னைப் பாதுகாத்து அருள்புரியுங்கள்'' என்று கண்களில் அருவி பெருக்கெடுத்தோட கபீர்தாசர் திருவடிகளில் கோபன்ன வீழ்ந்து வணங்கினர்.

பக்திக் கண்ணீருடன் வீழ்ந்து கிடந்த கோபன்னவை வாரி எடுத்து ''என் அருள் குமாரனே, உனக்கு உபதேசம் செய்யவே உன்னை நாடிவந்திருக்கின்றேன். நீ உபதேசம் பெறுவதற்குரியபக்குவத்தை அடைந்திருக்கின் ருய்''என்றுகூறி வலக்கையைக் கோபன்னவின் சிரசில்வைத்து ஆசீர்வதித்தார். கோபன்னவின் மனத்திலிருந்த மாசைப் போக்கித் தாரக மந்தி ரத்தை அவருக்கு உபதேசித்தார். கபீர்தாசர் தாரக மந்திரத்தின் மகிமையைச் சம்பவம் ஒன் றைக் கொண்டு கோபன்னவுக்கு விளக்கிக் காட்டினர்.

''கொலையும், கொள்ளையும் செய்து வந்த பாமரமனிதன் 'ராமா' என்னும் தாரக மந்தி ரத்தை உச்சரித்து வால்மீகி மகரிஷியாக மாறி னன். தாரக மந்திரத்தின் மகிமை அத்தகைய தாகும். மனிதனுக்கு எல்லாச் சமயத்திலும் துணையாய் இருப்பது ராம நாமம். மனதுக்கு ஆறுதல் தருவதும் ராம நாமம். நீ அனைத்துக் காரியத்தையும் ராமனுக்கே அர்ப்பணம் செய்து விடு. மனம், மொழி, மெய்களில் பரிசுத்தனகி ராம நாமத்தைத் தியானிப்பா யாகில் பேரின்பப் பேற்றினை அடைவாய். நான் உனக்குச் சொல்லுவது இதுவேயாம். நான் சென்று வருகின்றேன்.''

கோபன்ன கபீர்தாசர் பாதங்களில் வீழ்ந்து ''சுவாமி, அடியேனைவிட்டு இவ்வளவு விரைவில் செல்லக்கூடாது. இவ்வீட்டில் இன்னும் சில காலம் தங்கி எனக்குத் தத்துவ உபதேசம் செய்து என்னைக் கிருதார்த்தன் ஆக்குவீர்க ளாக'' என்று கோபன்ன வேண்டிக்கொண் டார். ''பரிசுத்த ஆத்மனே! துயரப்படவேண் டாம். நான் மீண்டும் உன்னை வந்து காண் பேன். உன் அன்பு மொழிகளைக் கேட்பதில் எனக்குப் பேரானந்தம் ஏற்படுகிறது. உன் னைப் போன்ற அருள்தாகம் கொண்டவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களையும் உய் விக்க வேண்டும். நீ ராம பக்தியில் குறை யாது ஓங்கி வருவாயாக'' என்று கோபன்ன வுக்குக் கூறிவிட்டுக் கபீர்தாசர் அவர் விட்டை விட்டு வெளியேறினர்.

கபீர்தாசரின் பிரிவு கோபன்னவுக்குச் சிறிது நேரம் துயரத்தைத் தருவதாக இருந் தது. தாயைப் பிரிந்த சேய் போல் கோபன்ன துக்கம் அடைந்தார். ராம பக்தியில் அவரு டைய உள்ளம் ஆழ்ந்து ஈடுபடலாயிற்று. அவர்தம் நெஞ்சுக்குக் கூறிய புத்திமதியாவது:

"பாழும் நெஞ்சே, நீ என்வசம் ஆகாததால் துயரங்கள் என்னை வந்து தாக்குகின்றன. ஒரு கணநேரமாவது அசையாது அமைதியுற்றிருக்க உனக்குத் தெரியாது. உலகத்தில் எதை வேண்டுமென்றாலும் சாதித்து விடலாம். உன்னை அடக்குதலோ இயலாத காரியம். கொடிய மிருகங்களையும் அடக்கிவிடலாம். பாம்பை வேண்டியவாறு ஆட்டி வைக்கலாம். மதயானையை வசப்படுத்தலாம். கூடுவிட்டுக் கூடு பாயலாம். பறவையைப் போல் ஆகாயத்தில் பறக்கலாம். நீர்மேல் நடக்கலாம். கனல்மேல் இருக்கலாம். விண்ணவரை ஏவல் கொள்ளலாம். ஆனால் மனமே! உன்னைக் கட்டுப்படுத்துதல் இயலாததாக இருக்கிறது. உன்னை அடக்குவதற்கு உபாயம் அறியாது திண்டாடுகின்றேன். குருநாதனின் அருளும், ராமபிரானின் அருளும் உன்னை அடக்குவதற்கு உதவுகின்றன. உன் வழி செல்லாமல் என் வழி நிற்பாயாகில் உனக்கு எல்லா நலன்களும் உண்டாகும். நீ ஈசனிடத்தில் லயமாவாயாகில் உனக்குப் பெருமை உண்டாகும். எதனிடத்தும் நீ ஆசை வைக்காதே. மண், பெண், பொன் ஆசைகளை விட்டுவிடு. நீ பரிசுத்தம் அடைந்து ஆன்ம தியானம் செய்" இங்ஙனம் விசாரத்தால் மனதை அடக்கி ஜபத்திலும், தியானத்திலும், பஜனையிலும் மனதை ஈடுபடுத்தி பக்தியில் மூழ்கி வந்தார்.

அவருடைய பந்துமித்திரர்கள் மணம்புரிந்து கொண்டு இல்லறம் என்னும் நல்லறத்தை நடாத்தி மக்களை எல்லாம் பக்தியில் திருப்பும் செயலில் இருவரும் ஈடுபடுங்கள் என்று புத்தி கூறினார்கள். கோபன்னாவும் குணத்தில் மிக்க ஒருவளை மணம்புரிந்து இல்வாழ்வு நடாத்தி வந்தார். இல்வாழ்வின் விளைவாக அவர்களுக்குக் கவர்ச்சி பொருந்திய ஆண் குழந்தை பிறந்தது.

பக்தியில் ஆழ்ந்து போகப் போகப் பகவானைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆவல் அவர் உள்ளத்தில் எழுந்தது. அப்பொழுது அவர்தம் குருதேவரை நினைத்தார். குருதேவர் அவர் முன்தோன்றி உனக்கு நாளைக்குள் ராமதரிசனம் கிடைக்கும் என்று கூறி மறைந்து போய் விட்டார். அடுத்த நாள் காலையில் வீட்டையும் தெருவையும் அலங்காரம் செய்து ஸ்ரீராமபிரான் அமர்வதற்கு மலரைக்காட்டிலும் மிருதுவான இருக்கையையும் ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். பக்தர்களோடுகூடி ராமநாம சங்கீர்த்தனம் மனதை உருக்கும் வகையில் நிகழ்த்தினார். அப்பொழுது அசரீரியாக அவருக்குப் பகவான் பகர்ந்ததாவது: "அன்பா! என்தரிசனம் பெறுவதற்கு நீ இன்னும் பக்குவம் அடையாது இருக்கின்றாய். நீ பக்குவம் அடைந்துவிட்டால் நானே வலியவந்து உனக்குக் காட்சி கொடுப்பேன். பக்குவநிலை அடைந்த பக்தர்களின் ஒவ்வொரு காரியத்தையும் பூர்த்தி செய்வது என்னுடைய கடமையாகும்" என்று அருளினார். கோபன்னாவின் பக்தியைச் சோதிக்கப்பகவான் ஒருகாளை ரூபம் எடுத்துச் சேற்றில் படிந்து நேராகக் கோபன்னா வீட்டுக்குச் சென்றார். கோபன்னா தமக்காக அமைத்து வைத்திருந்த இருக்கையில் சேற்று மேனியோடு புரண்டார். அங்கிருந்த பக்த கோடிகள் அனைவரும் அக் காளையைத் தடி கொண்டு அடித்து விரட்டி ஓட்டினர்.

கபீர்தாசர் கோபன்னாவிடம் சென்று "காளை ரூபத்தில் வந்த பகவானை அடித்துத் துன்புறுத்திவிட்டீர்கள். பகவான் காட்சிகொடுத்தும் நீங்கள் அதை அனுபவிக்க முடியவில்லை" என்று கூறினார். இதைக்கேட்டதும் கோபன்னா மிக்க துயரம் அடைந்தார். தம் அறியாமையைக் குறித்து மிகவும் வருந்தினர். மேலும் அவர் பகவானிடம் பக்தி செலுத்துவதிலும் பக்தகோடிகளை உபசரிப்பதிலும் தீவிரமாகச் செயல்பட்டார். பக்தகோடிகளைப் பராமரிப்பதில் மூதாதையர் செல்வத்தை எல்லாம் செலவழித்துவிட்டார். கையில் பணம் இல்லாது போனபொழுது பக்தர்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லையே என்றுதான் கவலைப்பட்டார். பணம் இல்லையே என்ற கவலை அவருக்கு இல்லை. வறுமையில் உழல்வதற்கிடையில் அவர் மனம் பக்தியில் ஆழ்ந்து ஈடுபட்டு வந்தது. வறுமையைப் போக்குவதற்கு ஹைதராபாத் மன்னனிடம் சென்று உத்தியோகம் பெறுவது சிறந்த உபாயமாகும் என்று சிலர் யோசனை கூறினர். அந்த யோசனைக்கு ஏற்ப ஹைதராபாத் மன்னனை அணுகினர். ஹைதராபாத்மன்னன் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவன் எனினும் இந்துக்களிடம் அன்புடனும், பார

பட்சமின்றியும் நடந்துகொண்டான். அவன் திறமை வாய்ந்த இந்துக்களை உத்தியோகத்தில் அமர்த்தினன். கோபன்னுவுக்கும் தன் அரசாங்கத்தில் ஓர் உத்தியோகம் தந்தான். பத்ராசலத்தில் அவ்வமயம் தாசில்தார் வேலை காலியாக இருந்தது. அவ்வேலைக்குக் கோபன்னுவை நியமித்து முஸ்லீம் மன்னன் அனுப்பி வைத்தான்.

பத்ராசலத்தின் மகிமையைக் கோபன்ன ஏற்கனவே அறிந்திருந்தார். எனவே தனக்கு அங்கு உத்தியோகம் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதினர். பத்ராசலத்துக்குப் பல்லக்கில் ஏறிச் சென்ற கோபன்ன அப்பதியை அணுகியபோது பல்லக்கிலிருந்து கீழிறங்கி பத்ராசலக்கோயிலுக்குச் சென்று சீதா லக்ஷ்மண சமேதராய் விளங்கும் ஸ்ரீராமபிரானைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார். பின்னர் நேராக நகரத்துக்குள் நுழைந்தார். மக்கள் அவரை மகிழ்வுடன் வரவேற்றனர். மக்களைப் பார்த்துக் கோபன்ன கூறியதாவது: "அன்புக்குரிய மக்களே, தாசில்தார் உத்தியோகத்தைச் செம்மையாக நடத்துவதற்கு உங்களுடைய பூர்ண ஒத்துழைப்புத் தேவை. நீங்கள் கட்ட வேண்டிய கிஸ்தி பணத்தைத் தவறாது செலுத்திவிடுங்கள். நல்லொழுக்கத்திலும், பக்தியிலும் நாம் ஊறி இருப்போம்" இங்ஙனம் குடிமக்களுக்கு மகிழ்வூட்டி உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார். நாள்தோறும் பத்ராசலத்தில் கோயிலுக்குச் சென்று ராமபிரானைத் தரிசிப்பதும், குடிமக்களின் நலன்களை விசாரித்துக் குறை இருந்தால் போக்குவதும், குடிமக்களைத் திரட்டி அவர்களோடு பஜனை செய்வதும், யாத்ரிகர்களையும், பக்தர்களையும் உபசரிப்பதும் முறையாக நடந்து வந்தன. அரசனுக்குரிய கிஸ்தியை மக்களிடமிருந்து முறையாக வசூலித்துச் செலுத்தி வந்தார். அதனல் அரசனும் அவரைச் சிலாகித்துப் பேசினன்.

தினந்தோறும் பக்தர்கள் கூட்டத்துடன் பத்ராசலமலையில் கோயில் கொண்டிருக்கும் ராமபிரானைத் தரிசிப்பதில் ஆனந்தம் அடைந்த கோபன்ன அக்கோயில் பழுது பட்டுக் கிடந்ததைக் குறித்துக் கவலைப்பட்டார். அக்கோயிலைப் புதுப்பிக்க வேண்டும் என்று எண்ணினர். தாம் நினைத்ததைச் செயல்படுத்தவும் தொடங்கினர். திறமை வாய்ந்த சிற்பிகள், ஊக்கம் நிறைந்த தொழிலாளர்கள் உடனே கோயில் பணியில் அமர்த்தப்பட்டனர். உன்னதமான கோபுரங்களும், கோயிலைச் சுற்றி மதில் சுவர்களும் எழுப்பப்பட்டன. ஸ்ரீ ராமபிரான் இருந்த மூலஸ்தானத்தைக் கட்டுவதற்குப் பிரத்யேகக் கவனம் செலுத்தப்பட்டது. இயற்கைக் காட்சியும், கோயிலின் சிற்பவேலையும் பக்தர்களுடைய உள்ளத்தில் ஆழப்பதிந்தன. நீராடுவதற்குத் தெளிந்த சுனைகளும், அருவிகளும் ஆங்கு இருந்தன. பசியாற்றுவதற்கு மா, பலா, வாழை முதலிய கனிகளும் தங்குவதற்கு நிழலைத் தருகின்ற சோலைகளும் ஆங்கு இருந்தன. அக்கோயிலுக்குப் போனவர்களுக்குத் திரும்பி வரவே மனம் வராது. மலைக்குக் கோயில் அழகு தருவதாயும், கோயிலுக்கு மலை அழகு தருவதாயும் அமைந்திருந்தன. மலைக்குப் பக்கத்தில் ஓடிய கோதாவரி மேலும் ஆங்கிருக்கும் அழகை மிகுதிப்படுத்தியது. புண்ணிய நதிகள் ஏழினுள் கோதாவரியும் ஒன்ருகும். கோதாவரி நதியில் நீராடி பத்ராசல மலையைப் பிரதக்ஷணம் செய்து ராமபிரான் சந்நிதிக்குச் சென்று ராமபிரானைத் தரிசித்து மக்கள் தங்களிடம் பக்தியைப் பெருக்கி வந்தனர். பக்தர்களை உபசரிப்பதிலும் பத்ராசலராமனைத் தரிசிப்பதிலும் கோபன்ன பேரானந்தம் அடைந்து வந்தார். கிஸ்தி பணத்தைப் பகவத் சேவையிலும், பக்தர்கள் சேவையிலும் செலவழித்து வந்த கோபன்ன அரசனுக்குக் கிஸ்தி அனுப்புவதை மறந்து விட்டார். அரசனும் கிஸ்திப் பணத்தை வாங்கி வரும்படி பத்ராசலத்துக்கு ஆள் அனுப்பினர். அரசனல் அனுப்பப்பட்ட ஜவானைப் பத்ராசல கோயிலுக்கு அழைத்துச் சென்று ஆங்குத் தான் செய்த திருப்பணிகளையெல்லாம் விவரித்துச் சொன்னர். அத்திருப்பணிகளைப் பார்த்துவிட்டு ஜவான் கூறியதாவது: "தாங்கள் செய்துள்ள காரியங்கள் யாவும் மகத்தான காரியங்கள் ஆகும். இதனல் பல மக்கள் பகவத் தரிசனம் பெற்றுப்பயன் அடைவார்கள். ஆனல் தாங்கள் அரசாங்கப் பணத்தை எடுத்து இக்காரியங்களைச் செய்துள்ளீர்கள். அரசனுடைய கோபத்திற்கு நீங்கள் ஆளாவீர்கள்."

"நான் ஈசுவர சங்கல்பத்திற்குப் புறம்பாகப் போகின்றவன் அல்லன். அவர் என் உள்ளத்திலிருந்து இயக்கி வருவதை நான் உணர்கின்றேன். ஈசனுடைய திட்டப்படி நடக்கட்டும்" என்று கோபன்ன கூறினர்.

ஜவான் திரும்பி வந்து அரசனிடம் நடந்ததை எல்லாம் விளக்கிச் சொன்னன். அரசாங்கப் பணத்தை எடுத்துக் கோயில் கட்டிய விஷயத்தை அறிந்ததும் அரசன் கோபம் அடைந்தான். நான்கு சிப்பாய்களை அழைத்து "கோபன்ன தான் செலுத்தவேண்டிய கிஸ்தி பணம் முழுவதையும் செலுத்தத் தவறினல் அவரைக் கைது செய்துகொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான். சிப்பாய்களும் பத்திராசலத்துக்கு விரைந்து சென்று கோபன்னவிடம் விஷயத்தைக் கூறினர். கோபன்ன தம் மனையாளையும், புத்திரரையும் பார்த்து "நம்மை ராமபிரான் காப்பார்; அவர் துணை நமக்கு இருக்கும்பொழுது யாதொன்றும் நிகழ்ந்து விடாது. நான் விரைவில் திரும்பி வந்துவிடுவேன். நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்று ஆறுதல் கூறிவிட்டு அச்சிப்பாய்களுடன் புறப்பட்டார். கோபன்ன கிஸ்தி கட்டாததற்காக அரசனுடைய ஆட்கள் அவரைக் கைது செய்துகொண்டு போகிருர்கள் என்பதை அறிந்த பொது மக்கள் வருத்தம் அடைந்தனர். கோபன்னவை அழைத்துச் செல்வதைத் தடுக்கவும் முயன்ருர்கள். ஆனல் கோபன்ன அவர்களுக்கும் ஆறுதல் கூறி ராமனுடைய சித்தப்படி நிகழட்டும் என்று சிப்பாய்களோடு நடந்தார். போகும் வழியில் வழிபடும் தெய்வமாகிய ராமனைத் துதித்துக் கொண்டே போனர்: "ராமா, உலக வாழ்க்கை எத்தகையது என்பதை நீயே வாழ்ந்து காட்டி இருக்கின்ருய். அரியணை மீது ஏறி ஆட்சி புரிவதற்குரிய சமயத்தில் நீ காட்டுக்குத் துரத்தப்பட்டாய். அவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் நீ சமமாக ஏற்றுக்கொண்டாய். உலக வாழ்க்கை இன்பமும் துன்பமும் உடையது என்பது உன் வாழ்க்கையின் மூலம் நீ விளக்கிக்காட்டி இருக்கின்ருய். ஆனல் நீ அவ்விரண்டிலும் சம்பந்தப்படாதவனக வாழ்ந்திருக்கின்ருய். பக்தர்களையும் அத்தகைய நிகழ்ச்சிகள் வரும்பொழுது உன் நினைவிலேயே மூழ்கி இருக்கச் செய்து அவைகளைவெல்லும் ஆற்றலை அவர்களுக்குத் தருகின்ருய். அத்தகைய ஆற்றலை எனக்கும் தந்து ஆட்கொள்வாயாக! வாழ்க்கையில் ஏது நேரினும் என் உள்ளம் உன்னை விட்டுப் பிரியாதிருக்கும் நிலையை எனக்குத் தந்தருள்க!" என்று பிரார்த்தித்துக் கொண்டே சிப்பாய்களுடன் ஹைதராபாத்நகர் சென்று அடைந்தார். சிப்பாய்கள் ஆங்கு அவரைக் காவலில்வைத்தனர். கோபன்னவைக் கொண்டு வந்து காவலில் வைத்துள்ள செய்தியைச் சிப்பாய்கள் மந்திரிமார்களுக்கு அறிவித்தனர்.

கோபன்ன வந்த செய்தி அறிந்ததும் மந்திரிமார்கள் அவரைச் சென்று பார்த்தனர். அவர்கள் கோபன்னவைப் பார்த்து "நீ இவ்விதம் ஏமாற்றுவாய் என்று நாங்கள் நினைக்கவில்லை. இச்செயலால் உனக்கு ஆபத்தைத் தேடிக் கொண்டதுமன்றி உன் குடும்பத்துக்கும் அழியாப் பழியைத் தேடிவைத்துவிட்டாய். அரசன் என்ன கூறுவானே? தெரியவில்லை. உன் உத்தியோகம் போய்விடலாம். ராஜசபையில் நீ என்ன கூறித் தப்பித்துக் கொள்ளப் போகின்ருய்? அரசனுக்குரிய வரிப் பணத்தை எடுத்துப் பகவத் கைங்கரியம் செய்வது தகும் என்று நினைத்தாயோ...? உனக்குரியதை என்ன வேண்டுமானலும் செய்து கொள்ள உனக்கு உரிமை உண்டு. அரசனுக்கு நீ கூறும் சமாதானம்தான் என்ன?" என்று கேட்டனர். கோபன்ன விடை கூறியதாவது: "எம்பெருமான் இருக்கும்போதுஎனக்கு என்ன குறை? கிஸ்திப் பணத்தை மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தியுள்ளேன். அதை வீண் விரயம் செய்யவில்லை. என்னைக் காப்பது பகவான் செயலாகும். நான் செய்தது நல்ல காரியமாகையால் நீங்களும் அரசனுக்குத் தர்ம காரியத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கோபத்தைத் தணிப்பதற்கு வேண்டிய உபாயம் செய்யுங்கள். தெய்வத்திற்குத் தொண்டு செய்வது தான் நான் கொண்டுள்ள குறிக்கோள் ஆகும். இறைவன் திட்டப்படி நிகழட்டும். என் உள்ளத்தில் 'சரி' என்று தோன்றியதைச் செய்து விட்டேன். அதன் விளைவு எது ஆனலும் அதை ஏற்றுக்கொள்வேன்." (தொடரும்)

ஞான வெட்டியான் - 21

'கொல்லாவிரதம் குவலயம் எல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே' என்ருர் தாயுமானவர். இயற்கையின் அமைப்போ இதற்கு நேர் மாருனது. இதை யாரே மாற்ற வல்லவர்! எண்ணெய் இல்லாது தீபம் எரியாது. அதேபாங்கில் ஒவ்வோர் உயிரும் தான் வாழ்ந்திருத்தல் பொருட்டு மற்ற உயிர்களை வாங்கிய வண்ணமாயிருப்பது இயற்கையைப்பற்றிய உண்மையாம்.

'அஹிம்சா பரமோ தர்ம:' என்பது ஆன்ருேர் வாக்கு. ஹிம்சை என்னும் கொடிய செயலுக்கு எதிரிடையாயிருப்பது அஹிம்சை. ஹிம்சை என்னும் சொல் வடநாட்டில் உள்ள சில மொழிகளில் 'பொருமைப்படுதல்' என்னும் பொருளைத்தருகிறது. பொருமைப்படுதலால் ஒருவன் தன் ஆற்றலை அறவே இழக்கின்ருன். உலகிலுள்ள உயிர்வகைகள் அனைத்திடத்தும் அதனதன் ஆற்றல் உச்சநிலை எய்தியிருக்கிறது. அப்படி உயிர்வகைகளின் பண்புகளைப் பாராட்டுதற்கேற்ப ஒருமனிதனுடைய வாழ்வு பெருநிலை எய்துகிறது. இதற்கு நேர்மாருக தனக்குப் பிடிக்காத மற்ருெருவனுடைய பேராற்றலைக் கண்டு பொருமைப்படுகின்றவன் தானே தன்னிடத்துள்ள ஆற்றல்களையெல்லாம் இழந்து விடுகிருன்.

இதற்கு ஏற்றதொரு சான்று பாண்டவர்கள். அவர்கள் ஐவரும் போற்றுதற்குரிய மேன்மைகள் பல படைத்திருந்தனர். அந்த ஐவர்களுக்கும் தாயாதிகளாக வாய்த்திருந்த கௌரவர்கள் நூறு பேர். ஆற்றலிலே அந்த நூறு பேரும் பாண்டவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லர். அப்படியிருந்தும் தங்கள் தாயாதிகள் மீது அவர்கள் படைத்திருந்த பொருமையின் விளைவாக வாழ்க்கையிலே அவர்கள்எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் அனர்த்தமாய்ப் போயின.

நெடுநாள் பிற ஆட்சிக்கு அடிமைப்பட்டிருக்கும் நாடு ஒன்றிலே மக்களுக்கிடையில் பொருமை ஓங்கி வருவது சர்வ சாதாரணம். தங்களை ஆண்டு வரும் அதிகாரவர்க்கத்தினரிடத்து மேன்மை எவ்வளவு இருந்தாலும் அதைப் பாராட்டுவார்கள். ஆனல் தங்கள் இனத்தவன் ஒருவனிடம் ஏதேனும் சிறப்பு ஓங்கி வருமாகில் அதைக்கண்டு சகிக்காத நிலையில் அடிமை மக்கள் இருந்துவருகின்றனர்.

அடிமைவாய்ப்பட்டிருக்கும் கீழ்நிலையில் உள்ள மக்களின் பாங்கிலேயே நம் நாட்டு மக்கள் சுமார் முன்னூறு அல்லது நானூறு வருஷமாக வாழ்ந்து வந்ததின் விளைவாக அவர்கள் பரஸ்பரம் பொருமை பூணுவதிலேயே ஊறியிருந்தனர். பத்தொன்பதாம் நூற்ருண்டு உலக சரித்திரத்திலேயே ஒரு வியப்புக்குரிய காலமாய்த் திகழ்ந்தது. அக்கோட்பாட்டை அப்படியே படம்பிடிக்கும் வாய்ப்பு விவேகானந்த சுவாமிகளுக்கு அமைந்திருந்தது. அவருடைய ஜீவிதத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்தெடுக்கலாம். நுண்ணறிவாளராகிய அவர் நவீன முறையிலே கல்வி மிகப் பயின்று கல்லூரியினின்று நாஸ்திகராக வெளியேறினர். பின்பு அவர் ஒரு நிறைஞானியாக மாறியமைந்து நாட்டின் பண்புகளையெல்லாம் நல்வழியில் புதுப்பிக்கும் பேராற்றல் வாய்க்கப்பெற்றவராக வடிவெடுத்தார். பின்பு தம் குருநாதர் அருளால் அவர் நிறைஞானியாக மாறியமைந்தார். இது முதல்படி.

இரண்டாம் படியாக நாடு முழுதும் சுற்றிப் பார்த்து அது பொருமையிலேயே ஊறிக்கிடந்ததைக் கண்டு வருந்தினர். இந்தப் புண்ணிய பூமி பழங்காலத்தில் இருந்த மகோன்னத நிலையும், இக்காலத்தில் அது விழ்ந்துகிடக்கும் பாங்கும், எதிர்காலத்திலே அது எத்தகைய நிலையை அடையப்போகிறதோ என்ற எண்ணமும் அவர்உள்ளத்தை வாட்டிக்கொண்டு இருந்தன. இந்த நிலையிலே அவர் கால்நடையாகக் கன்னியாகுமரி வருகின்ருர். அன்னையின் திருவடிகளில் அமர்ந்து ஆழ்ந்து தியானம் பண்ணுகின்ருர்.

எதிர்கால இந்தியா மகோன்னத நிலையை அடையப்போகிறது என்னும் ஞானக் காட்சி பெற்ருர். இது அவர் அடைந்த மூன்ரும் நிலையாம். இத்தகைய அரிய பெரிய விழிப்பு நிலையை உண்டுபண்ணுதல் பொருட்டு அவர் வெளிநாடு செல்ல வேண்டியது அவசியமாயிற்று. இது நாலாவது படித்தரம்.

இறந்தகாலமும் எதிர்காலமும்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக்கட்டுரையை பதீஸ்வரீ கிருஷ்ணப்ரியா தமிழில் மொழிபெயர்த்தது.)

பாரதத் தாயின் உண்மையான புதல்வர்கள் ஆக விரும்புவோருள் இருவித மக்கள் இருக்கின்றனர். பழைமையின் பெருமையை நினைத்துக் கடந்த காலத்தையே நோக்குவோர் ஒரு வகையினர். இந்தியத் தன்மையை எதிர்காலத்திலும் தொடர விரும்பி முன்னோக்கிப் பார்வையைச் செலுத்துவோர் மற்றொரு வகையினர். பழைமையில் விருப்பம், புதுமையில் நாட்டம் ஆகிய இவ்விரண்டினுள் பின்னது தான்—புதிய இந்தியாவைப் படைக்க விரும்பும் ஆர்வந்தான்—அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் இவ்விரண்டுமே நமக்குத் தேவைதான் என்பதையும் மறக்கலாகாது. ஏனெனில் எதிர்காலம் என்பது கடந்த காலம் தரும் சக்தியிலிருந்து தான் உருவாக்கப்படவேண்டும்.

கண்டனம் செய்யும் கடுமொழிகளால் ஒருவனுக்குக் கல்வியளிக்க முடியாது. மாணாக்கனிடத்து மாண்பை உருவாக்குகிற ஆசிரியர் யார்? 'நம் லட்சியம் என்ன? அதன் பொருட்டு நாம் எவ்வாறு முயன்றோம்? எந்த அளவிற்கு நம் முயற்சி சரியாக இருந்தது? அதனை எவ்விதம் இன்னும் சீர்திருத்தலாம்?' என்பன போன்ற கேள்விகளுக்கு நமக்குப் பொருத்தமான விடைகளை நம்மைவிடத் தெளிவாக அறிந்து நமக்குப் புகட்டுபவரே நம் ஆசிரியர். நம்முடைய குறைகளைவிளக்கி, நாம் முன்னேறுவதற்கான வழிகளைச் சுட்டிக்காட்டி நம்பிக்கை அளிப்பவரே உண்மையான ஆசான் ஆகிறார்.

தனி மனிதனைப்பற்றிய இந்த உண்மை ஒரு நாட்டிற்கும் பொருந்தும். ஒரு தேசத்தை இழிவு படுத்துவதாலோ, குறை கூறுவதாலோ அதற்கு உதவி செய்ய முடியாது. கடந்த காலத்தை ஒரு தோல்வி என்று குறை கூறிவிட்டு அதிலிருந்து எதிர்காலத்தை உருவாக்க முடியாது. இயலாத காரியத்தைச் செய்ய முயல்பவன், தன் முயற்சி தோல்வியில்தான் முடியும் என்பதை அறியமாட்டான். கற்பிக்கு முன்னர் கற்பவனின் மூலம் வெளிப்படும் தெய்விக சக்தியை வணங்கிய பின்னரே ஆசிரியர் கல்வி புகட்டுதலைத் துவக்க வேண்டும். சேவை என்பது உண்மையில் ஈசுவர ஆராதனையே; தானம் செய்தலும், தலைவன் தாள் பணிதலும்; கல்வி கற்பித்தலும் கடவுள் வழிபாடுதான். "உன்னிடத்து நான் காண்பது எல்லையில்லா ஆத்மனை—தூயதும், கட்டுப்படுத்த முடியாததும், எதிர்க்கவொண்ணாத சக்தியுடையதும், என்றும் உள்ளதுமான ஆத்மனை. அந்த ஆத்மசக்தி உன்மூலம் வெளிப்படுவதற்கு இடையூறாய் இருப்பவற்றை நீயே நீக்குவதற்கு உதவுவதே என் விருப்பம். உனக்குச் செய்யும் உதவி மனித குலத்திற்கே செய்யும் உதவியாகிறது. மனித குலம் முழுமையும் உன்னிடத்து இல்லாவிட்டால் உன் பொருட்டுச் செய்யும் முயற்சிகளுக்கு என்ன பலன் இருக்கமுடியும்?'' இங்ஙனம் ஒருநல்ல ஆசிரியன் கருதுகிறான்.

தனி மனித முன்னேற்றத்தைப் போலவே சமுதாய முன்னேற்றம் பல சக்திகளைச் சார்ந்திருக்கிறது. அவற்றுள் முதன்மையானது லட்சியத்தைப் பற்றிய தெளிந்த அறிவு. அந்த லட்சியத்தை அடைவதற்குக் கடந்த காலத்தில் செய்யப்பட்ட முயற்சிகளை அன்பு கலந்த உணர்வோடு நாம் பாராட்ட வேண்டும். ஏனென்றால் பெரும் சமுதாய எழுச்சிகள் எவ்வளவு புதுமையானவையாய் இருந்தாலும் ஓரளவு பழைமையைச் சார்வதாயும் இருக்கும்.

ஆனால் கடந்த காலத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திவிடக்கூடாது. முன்னோரின் பெருமைகளிலேயே நாம் முடங்கிவிடுதல் ஆகாது. ஏதேனும் ஒரு காலத்தின் தன்மைகளாலும் சாதனைகளாலும் முடக்கப்படுவதைத் தவிர்க்க முடியாதுஎன்றால்,நாம்எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்களிலேயே முடங்கியிருப்போம். அறிந்தோஅறியாமலோநம்முன்னோரின்வலிமையைப் பிதுரார்ஜிதமாக நம்முடன் நாம் எப்போதும் எடுத்துச் செல்கிறோம். விரும்பினாலும் இதைத் தவிர்க்க முடியாது. எனவே, அந்தச் சக்தியை முதலாகக் கொண்டு பின்வரும் சந்ததியினருக்குக் கடின முயற்சி செய்தேனும் புதிய பாதையை வகுத்துக் கொடுக்க வேண்டும். கடந்த காலத்தில் கட்டுண்டிருப்பது நம் சக்தி

களை நாமே தளையிட்டுக் கொள்வதாகும். சுதந்திரத்தை மறுக்கும் இந்தப் பழைமை வாதம்தான் இளைஞர்களுக்குக் கண்மூடித்தனமான எதிர்ப்புச் செயலாகத் தெரிகிறது; அவர்களைப் பொறுமையிழக்கச் செய்கிறது. ஆனால் சிந்தித்துப்பார்த்தால்குறைபாடு பழைமையில் இல்லை. முன்னேற்றத்திற்குத் தேவையான சுதந்திரத்தை அளிக்க மறுப்பதுதான் குறைபாடாம். முதியோர் விதிக்கும் கட்டுப்பாடுகளையும், எழுப்பும் மறுப்புக்களையும் கேட்டு முணுமுணுக்கும் இளைஞர்களே இந்த உண்மையை ஒரு நாள் உணர்வார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதுபோல, எல்லா மதங்களும் உண்மையானவையே. மற்ற மதங்கள் பொய்யானவை என்று சொல்லாத ஒரு மதத்திலுள்ள பகுதிகள் அனைத்தும் சரியானவையே. அவ்வாறே, நம் பழைமையில் பற்று வைப்பவர்கள் செய்வது அனைத்தும் சரியே — இளைஞர் செய்வது அனைத்தையும் தவறு என்று கண்டிப்பது நீங்கலாக. இளைஞர்கள் செய்வது அனைத்தும் சரியே—பின்னோக்கிப் பார்க்கும் பெரியோர்களிடம் கொள்ளும் அதிருப்தியும் மரியாதையின்மையும் நீங்கலாக.

நாம் அனைவரும் பிறர்நலத்தின் பொருட்டுப் பிரார்த்தனை செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம். எதிர்கால இந்தியா எப்படி இருக்க வேண்டும்? மேனாட்டார் செய்வது நமக்குப் பொருந்துமா? பொருந்தாதா? என்று கூடச் சிந்திக்காமல் நம்தேசத்தை இன்னொரு அமெரிக்காவாக ஆக்கவேண்டுமா? அப்படி முயன்றால் இந்தியா நிறம் மங்கிப் போன ஒரு நகலாகத்தான் இருக்கும். அத்தகைய தௌர்பாக்கியத்தை இறைவன் தவிர்ப்பாராக. புதுமை என்ற பெயரில்பொருந்தாதவற்றையும் புகுத்த முயல்கின்ற பொறுமையற்ற இளைஞர்களிடமிருந்து நாட்டின் பழைமைச் செல்வத்தைப் பாதுகாக்கின்றபெரியவர்கள் எத்தகைய சக்தி மிக்ககோட்டை போன்று இருக்கிறார்கள்! அவர்களுடைய அருமையைப் புரிந்து கொண்டு அவர்களை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆனால் பழைமையைப் போற்றுதல் என்ற பெயரில் இந்தியாவின் சிறகுகளை ஒடித்து, விரும்பிய வண்ணம் இருப்பதற்கோ, செய்வதற்கோ, உயரப் பறந்து செல்வதற்கோ இல்லாதபடி கூட்டிலே அடைத்துப் போட்டுவிட வேண்டுமா? எதிர் காலத்தை நோக்கி வளர வேண்டிய பாரதத்தாயைக் கடந்த காலத்தில் கட்டிப் போடுவதா? அப்படிச் செய்வதும் தகாது. தடைகளைத் தவிடு பொடியாக்கி இந்தியாவைப் படைக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்கு முதியவர்களின் அன்பும், ஆசியும் எப்போதும் கிடைக்கட்டும்.

வல்லமை வாய்ந்த இளைஞர்களே! முன்னேக்கிச் செல்லுங்கள். முன்னேற்றத்தின் பொருட்டுத் தைரியமாகச் சோதனைகள் பல செய்து பாருங்கள். உறுதியான நம்பிக்கை கொள்ளுங்கள். அச்சமற்று வீரநடை போடுங்கள். உங்கள் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் தேசபக்தியை நாம் அறிவோம். உங்கள் தந்தையும் தாயும் அவர்களுடைய முந்தையரும் உங்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளனர் என்பதையும் நாம் அறிவோம். முதியவர்களாகிய நாங்கள் இல்லாது போயினும் நாட்டுக்கு நஷ்டம் வந்துவிடாது. ஆனால் நாட்டின் நம்பிக்கை ஒளியாகிய நீங்கள் இல்லாத நாடு உயிர்வாழ முடியாது. இன்று நாட்டின் பணியில் வாழ்வை அர்ப்பணித்துள்ள நீங்கள் ஓய்வின் பொருட்டு இல்லத்தை நோக்கித் திரும்பும் நாளும் வரும். ''நாம் அலைந்ததும் போராடியதும் போதும், இனிப் பணியை நம் செல்வர்கள் செய்யட்டும்'' என்று தீர்மானித்து முன்னோர் சொன்ன முக்தி நெறியை நாடி வருவீர்கள். அப்போது நரைமுடி கண்ட நல்லவர்களை, பழைமையின் பாதுகாவலர்களை எத்துணை நன்றியோடு நினைத்துக் கொள்வீர்கள்! பழைமை என்னும் இந்த இல்லத்தைப் போன்று இன்னொரு புகல் இருக்க முடியாது என்பதை அப்போது உணர்வீர்கள். ஆண்டவனின் அழைப்பை அறிவிக்கும் ஆலயமணிகளைப் போல் வேறெதுவும் இனிமையாக இருக்க முடியாது என்பது அப்போது உங்களுக்கு விளங்கும். அப்போது இறந்த காலம் என்பது உண்மையில் இறந்துவிடாமல் இன்னும் உயிர் வாழ்கிறது என்றால் அது எதிர்காலத்தின் பொருட்டே என்ற உண்மையை ஏற்றுக் கொள்வீர்கள்.

ஆன்மீக நெறிகள்

(ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தர் அருளியது)

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சதேவர் இவ்வைய கம் உய்யவேண்டித் தம் வாழ்நாளெல்லாம் தக்ஷிணேசுவர ஆலயத்தில் தவம்புரிந்துவந்தார். தாம் பெற்ற அருள் ஒளியை எங்கணும் பரப்பு தற்பொருட்டுச் சீடர்கள் பலருக்கும் அவர் ஆன் மீகப் பயிற்சி தந்தருளினர். அவர் திருவடி களைச் சரணடைந்து தீட்சை பெற்றுத் துற வறம் மேற்கொண்டோர் பதினறு சீடர்கள் ஆவார்கள். அவர்களுள் ஸ்ரீமத் சுவாமி சிவா னந்த மஹராஜ் 1922 முதல் 1934ஆம் ஆண்டு வரை பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தபொழுது அரிய பெரிய முயற்சிகள் மேற்கொண்டு பரமஹம் சரின் கருணைவெள்ளத்தினைப் பாரதமெங்க ணும் பாய்ச்சினர். புவனேஸ்வரம், உதகமண் டலம் போன்ற இடங்களில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் கிளைகளை நிறுவியும், அறிவிலும், தூய்மையிலும் சிறந்த சான்றோர்களைத் திருத் தொண்டர்களாக உருவாக்கியும்,தாம் வலியுறுத் திய வாழ்க்கை நெறிகளைத் தாமே அனுஷ்டித் தும், தம்மை நாடி வந்த அடியார்களின் குறை களைப் பொறுமையுடன் செவிமடுத்துத் தக்க படி அறவுரைகள் புகன்று அவர்களைத் தூய நெறியிற் செலுத்தியும், குருதேவரின் அருள் வாக்குகளையும், அவரிடம் தமக்கு நேர்ந்த அனுபவங்களையும் உள்ளம் உருகுமாறு எடுத் தியம்பியும் இன்னும் பல வழிகளிலும் ஸ்ரீமத் சிவானந்தர் ஆன்மீகத் திருப்பணி புரிந்துவந்தார். அவர் பல்வேறு சந்தர்ப்பங் களில் அருளிய கருத்துக்கள் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அனைவருக் கும் பயன்படுவனவாகும். தூய தவ நெறியிற் சிறந்து விளங்கினமையால் ஸ்ரீமத் விவேகா னந்தர் இவரை 'மஹாபுருஷர்' என்றே போற் றினர். இவர் தம் திருவாக்கினை ஓர்ந்தோர் ஆன்மீக வாழ்வில் உய்வு பெறுதல் திண்ணம்.

''மஹராஜ்!என்னல் இயன்றவளவு தியானப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன். ஆயினும் அதில் என்னல் எத்தகைய இன்பமும் காண இயலவில்லை. ஏதோ ஓர் உடற்பயிற்சியை நேரம் தவருமற் செய்வது போன்றே இதுவும் நிகழ்கிறது. இதனல் என் மனதில் சாந்தியும் அந்தரங்கத்தில் ஆன்ம போதமும் எழ வில்லையே. இதற்கு என்ன செய்யலாம்?'' என்று இளம் துறவி ஒருவர் மஹாபுருஷரிடம் விண்ணப்பித்துக்கொண்டார். சிவானந்தர் பகர்வார்: ''அப்பா, சாந்தம் என்பது அவ் வளவு எளிதில் வந்து வாய்க்காது. முட்கள் நிரம்பிய பாதையைக் கடந்துசென்றே அதனை அணுகவேண்டும். 'தற்போதம் அல்லது தன் னைப்பற்றிய பேரறிவு என்பது ஒருகூர்முனைக் கத்தியைப் போன்றது. அது கடத்தற்கரிய தன்மையுடையது' என்று ஆன்றோர்கள் கூறு வார்கள். அது உண்மையிலேயே கடுமை யான பாதைதான். கடுமையான உழைப் பினல்மட்டுமே ஒருவன் ஆன்மீகப் பாதையில் முன்னேற இயலும். ஆயினும் இறைவனை அடையவேண்டும் என்ற தீவிரபக்தியுடன் முயற்சிப்பவர்கள் அந்தப் பரம்பொருளின் கடாட்சத்தைப் பெறுவது நிச்சயம்.பரமஹம்சர் அன்னையின் திருக்காட்சி பெறுவதற்கு முன் னல் எத்தகைய தீவிரமான பயிற்சிகளில் ஈடு பட்டார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

''கடவுள் மீது தூய அன்பு செலுத்தாத வெறும் ஆன்மீகப் பயிற்சி எதுவும் இறுதியில் எத்தகைய நற்பலனையும் அளிக்காது. ஒரு மனைவிக்குத் தன் மணளனிடம் இருக்கும் எல்லையற்ற அன்பு, ஒரு தாய் தன் குழந்தை யின் மீது கொண்டுள்ள பரிவு, ஒரு கஞ்சன் தன் செல்வத்தின் மீது வைத்துள்ள பேராசை இவை மூன்றையும் ஒன்றிணைத்து அளவில் அதனிலும் அதிகமான பேரன்பைத் தெய்வத் தின்மீது செலுத்துபவனே அவருடைய தண் ணருளுக்குப் பாத்திரன் ஆவான் என்பது குரு நாதரின் அருள்வாக்கு. தூய அன்பு ஒன்று தான் நம்மைத் தெய்வ சொரூபத்தில் லயிக்கச் செய்யும். உண்மையான சாந்தம், களிபேரு வகை இரண்டையும் அந்த லயிப்பில் நாம் காணலாம்.

''இறைவனின் கருணை இல்லாமல் அத்த கைய பேரின்பம் ஒருவருக்கு வாய்க்காது. எனவே நாள்தோறும் நாம் ஆன்மீகப் பயிற்சி

யில் ஈடுபடுதல் அவசியமாகும். இதயத்தைத் திறந்து காட்டி, சாதகன் தெய்வத்தை நோக்கிக் கதறவேண்டும். 'கடவுளே, என்மீது கருணை காட்டுங்கள். தாங்கள் எனக்குக் காட்சிதரத் திருவுள்ளம் கொள்ளாவிடில் நான் எவ்வாறு தங்களை அடைய முடியும்? பலவீனனான இந்த எளியவன் மீது இரக்கம் வையுங்கள்' என்று இறைவனை நோக்கி நாள் தோறும் பிரார்த்திக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கண்ணீர் வடிக்கின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் உள்ளம் தூயது ஆகும். கண்ணாடி போன்று துலங்கும் அத்தகைய மனதில் தெய்வம் தன்னை வெளிப்படுத்திக்கொள்வார்.

"பவஹாரிபாபா ஒருமுறை சுவாமி விவேகானந்தரிடம் கூறினார். 'உமது குருநாதரின் அறைவாசற்படியருகே ஒரு நாய்போல நீர் அடங்கி இருக்கவேண்டும்.' சுவாமிஜி மீண்டும்மீண்டும் இதனை எங்களிடம் வலியுறுத்திக் கூறுவார். தன்னுடைய எஜமானர் தனக்கு உணவு அளித்தாலும், இல்லையென்றாலும், தன்னை அடித்தாலும், அன்பு காட்டினாலும் அவர் வீட்டை விட்டு வேறு எங்கும் அந்த நாய் செல்லாது. அவ்விதமே பக்தன் கடவுளைச் சார்ந்திருக்கவேண்டும். அவருடைய திருவடி நிழலையே துணை எனக்கொண்டு எத்தகைய சூழ்நிலையிலும் விடாப்பிடியாக அதனைப் பற்றிப் பிடிப்பவனுக்கே இறுதியில் தெய்வத்தின் பேரருள் சித்திக்கிறது. நீங்கள் இப்பொழுது அவரிடம் தஞ்சம் புகுந்துள்ளீர்கள்; அவருடைய இயக்கத்தைச் சரணடைந்துள்ளீர்கள். எனவே நீங்கள் கவலை கொள்ளக் காரணமே இல்லை. குருநாதர் கூறுவதுபோல 'குழந்தையின் கரத்தைத் தந்தை பிடித்துக்கொண்டால் கீழே விழ நேரிடுமோ என்ற பயம் குழந்தைக்கு இல்லை.' எனவே இயக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு நீங்கள் ஒழுகும்வரை பரமஹம்சர் உங்களுக்கு நிச்சயம் பாதுகாப்பு அளிப்பார்.

"பரமஹம்சரின் பருவுடலைக் காண இயலாவிடினும்; அவருடைய தொண்டர்களாகிய எங்களைக் கண்டு எங்கள் வாய்மொழியில் அவர் கருத்துக்களை நீங்கள் அறிந்துகொள்ளலாம். அடுத்த தலைமுறையினரான துறவிகட்கு இந்த வாய்ப்பும் இல்லாது போகும் அன்றோ! இதையெல்லாம் கருத்திற்கொண்டே சுவாமிஜி இந்தத் திருமடத்தைத் தோற்றுவித்தார். இந்த அமைப்பில்பரமஹம்சரின் ஆன்ம உடல் தோற்றத்துக்கு வந்துள்ளது. உலகின் நலனுக்காக இன்னும் பல நூற்றாண்டுகள் இது இவ்வாறு அமைந்திருக்கும். பரமஹம்சர் தமது பொறுப்புக்களை இந்த அமைப்பின்வழியே நிறைவேற்றுவார். எனவே இந்த அமைப்புக்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உள்ளக் குறிப்பின் பிரகாரமே சுவாமி விவேகானந்தர் இதனைத் தோற்றுவித்தார். உலகத்தினரின் நன்மைக்காகவே நாங்கள் உரையாற்றுகிறோம்.உண்மை எதுவோ அதையே நாங்கள் வலியுறுத்துகின்றோம். மக்களைத் திசைமாற்றுவதற்காக நாங்கள் இங்கு வரவில்லை.

"இந்த இயக்கத்தில் இணைந்திருப்பவர்கள் அனைவரும் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைவது திண்ணம். தம்மைச் சரணடைந்தவர்களிடம் நம் அண்ணல் பெருங்கருணை காட்டுவார் என்பதில் உறுதியுடன் இருங்கள். தங்கள் உடல், அறிவு, உணர்வு, ஆன்மா ஆகியவற்றைத் தம்மிடம் ஒப்படைத்தவர்களை அவர் பெருங்கருணையுடன் காப்பாற்றுவார். இறைவனை அடைவதற்காகவும், சாந்தியைப் பெறுவதற்காகவும் நீங்கள் உலகத்தைத் துறந்துள்ளீர்கள். எல்லாவற்றுக்கும் குருதேவரையே நாடுங்கள். அவர் உங்களை ஆட்கொண்டு சாந்தியை அளிப்பார்."

"அவர் அறுதியிட்டுக் காட்டியுள்ள ஒழுக்க நெறிகளை நீங்கள் தவறாமல் பின்பற்றவேண்டும். நீங்கள் துறவியாக இருப்பதால் காம காஞ்சனங்களை அறவே நீக்கவேண்டும். தூய்மையும், ஆசையற்ற தன்மையும் என்றும் உங்கள் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். எந்தக் குற்றத்தையும் பரமஹம்சர் பொறுப்பார். ஒழுக்கமுள்ளவன்போல் காட்டிக் கொள்வதையும், தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதையும் அவர் பொறுக்கமாட்டார். அத்தகையவர்களை அவர் விலக்கி விடுகின்றார்."

மஹாபுருஷரின் இந்த உரையாடலைக் கேட்ட இளந்துறவி அவரைத் தாள்பணிந்து வணங்கி "பரமஹம்சரின் திருநிழலில் நான் என்றும் இருக்கும் வண்ணம் எனக்கு ஆசி

கூறுங்கள். வேண்டாத எண்ணங்கள் பலவும் என் உள்ளத்தை ஆட்டிப்படைப்பதால் நான் மகிழ்ச்சியற்று இருக்கின்றேன். அவற்றி லிருந்து விடுபடுவதற்குத் தாங்கள்தாம் மார்க் கம் சொல்ல வேண்டும்'' என்று வேண்டினர்.

உள்ளார்ந்த அன்புடன் மஹாபுருஷர் பகர்ந் ததாவது: “என் இதய பூர்வமாக உம்மை ஆசீர்வதிக்கின்றேன். பரமஹம்சர் திருநிழலில் தங்கி உமது வாழ்க்கையில் பூரணத்துவம் எய்துவீராக. கெட்ட எண்ணங்கள் தோன்றி ஞல் அவற்றை அலட்சியமாக ஒதுக்கித் தள் ளுங்கள். சுடர்விடும் தூய்மையே வடிவமான வர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அந்தப் புனித வடி வத்தையும், அவர்தம் திருநாமத்தையும் உள் ளத்தில் சிந்தித்தால், தீய எண்ணங்கள் யாவும் வெட்கமடைந்து ஒரு விஞடியில் வில கிப்போகும். தீய எண்ணம் உமது உள்ளத் தில் தோன்றிய கணமே அவரை நோக்கி நீர் புலம்பவேண்டும். “தெய்வமே, நான் பல வீனன். என்னைக் காப்பாற்றுங்கள். தாங்கள் என்னைக் காப்பாற்ருவிடில், வேறு யார்தாம் என்னைப் பாதுகாப்பார்கள்? நான் தங்கள் அடிமை அல்லவா? நான் தங்களின் புகலை நாடி யுள்ளேன் அல்லவா?'' என்று நீங்கள் வேண்டி ஞல், அவர் நிச்சயம் உங்கள் பிரார்த்தனைக் குச் செவிசாய்ப்பார்.

“விடியற்காலையில் துயில் எழுகின்ற பழக் கம் உங்களுக்கு இருக்கின்றது அல்லவா? காலை மூன்று அல்லது நான்கு மணிக்கே துறவி யானவர் எழுந்துவிட வேண்டும். இரவில் லேசான ஆகாரம் உட்கொண்டால் காலையில் விரைவில் எழுந்து விடலாம். அப்பொழுது புத்துணர்ச்சியுடன் இருப்பதையும் காணலாம். குருதேவரைக் காண நேர்ந்தது முதல் நாங்கள் இதனைத் தவருமல் பின்பற்றி வருகின்ருேம்.'' இங்ஙனம் மஹாபுருஷர் கூறி முடித்தார்.

மறுநாள் மாலையும் ஆரதி, ஜபம், தியானம் முடிந்த பிறகு அன்பர்கள் ஒருங்கு கூடி அவர் அறையில் கீழே அமர்ந்துகொண்டு அவர்தம் திருவாக்கினைச் செவியுற்ருர்கள். அப்பொழுது மஹாபுருஷ மஹராஜர் கூறியதாவது: “இரவு நேரம் ஆத்ம சாதனைக்கு மிகவும் ஏற் றது. தியானமும், ஜபமும் காலந்தவருமல் நியதிப்படியும், ஆழ்ந்த பக்தியுடனும் நிறை வேற்றவேண்டும். அவை உள்ளத்தைத் தூய்மை யாக்குகின்றன. தொடர்ந்து செய்து வந்தால் ஆன்மீக உணர்வைத் தூண்டுவதோடு, உள் ளத்தின் ஆழத்தில் விவரிக்க ஒண்ணுத மகிழ்ச் சியையும் அது உருவாக்கும். தியானம் முடிந்த உடனே ஒருவன் தன் இடத்தை விட்டு எழ லாகாது. சிறிது பொழுது அமர்ந்து அவன் தான் தியானம் செய்த பொருளைக் குறித்துக் கருத்துச் செலுத்தவேண்டும். பிறகு பிரார்த் தனைகள் சொல்லியும், கீதங்கள் இசைத்தும் தன் தியான உணர்வுக்கு அவன் வலிவு ஊட்ட வேண்டும். இடத்தை விட்டு எழுந்த பிறகும் அவன் பிறரிடம் அனுவசியமாய் வார்த்தை யாடலாகாது. உள்ளம் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டுத் தன்னில் தானே ஒருவன் லயித் திருக்கவேண்டும். இத்தகைய இடை விடாத பயிற்சியானது மனதை உயர்ந்த நிலையில் வைத்திருக்கவும், உள்ளத்தில் உவகையூற்றைப் பெருக்கவும் வழி வகுக்கும்.'' இவ்வாறு அவர் அருளியபோது, ஒரு துறவி கூறியதாவது: “மஹராஜ், சில சமயங்களில் நாம் திரு மடத்தை விட்டு நீங்கி வேறு இடங்களில் தியானம், எளிமையான வாழ்க்கை, ஒழுக்க நெறி ஆகியனவற்றை மேற்கொள்ளலா காதா? புனிதத் தலங்களைத் தரிசிப்பதும், பரிவ்ராஜகராக யாத்திரை செய்வதும் துறவறத்துக்கு மிகுந்த நன்மை செய்யும் அல் லவா?'' அதற்குச் சுவாமி சிவானந்தர் அளித்த உத்தரமாவது: “குழந்தாய்! உருட்டிவிட்ட உருண்டைக்கல்லில் எது ஒன்றும் ஒட்டாது. குறிக்கோள் இல்லாமல் இங்கும் அங்கும் திரி வதால் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணமுடி யாது. கடவுளை அடைவதற்கு இத்தகைய அலைச்சல் பயன்படாது. ‘தன்னுடைய அகங் காரத்தை விட்டொழிக்கவேண்டும், கடவு ளையே என்றும் சார்ந்திருக்கவேண்டும்' என்ற நோக்கங்களோடு ஒருவன் சில சமயங்களில் பல்வேறு இடங்களில் சேகரித்த உணவை உண்டு தன் ஜீவிதத்தைத் தொடரலாம். ஒரு வித உடைமையும் வைத்துக்கொள்ளாமல், எத் தகைய வெளியார் தொடர்புமின்றி ஒருவன் தனித்து ஓரிடத்தில் சிறிது காலம் வசிக்கலாம். சிறிதளவு யாத்திரை செய்வதிலும் தவறில்லை. ஆனால் வருடந்தோறும் இவற்றைச் செய்து

திரவேண்டும் என்ற அவசியம் இல்லை.

'எங்கே சென்று அலைகின்றீர்கள்? ஸ்ரீ ராமகிருஷ்ணரின் குழந்தைகள் ஒரே இடத்தில் தங்கவேண்டும்' என்று ஸ்ரீ அற்புதானந்தர் கூறுவார். அது உண்மையே. உள்ளத்தில் அமைதியைக் காண்பவன் உலகம் எங்கிலும் அமைதியைக்காண இயலும். எனவே எவரும் எங்கும் செல்லவேண்டிய அவசியம் இல்லை. குருநாதரும் 'எங்கே அலைகின்றாய், ஓ மனமே, சிந்தை அடங்கியே சும்மா இரு' என்று இனிய குரலில் அடிக்கடி கானம் பாடுவார்'' என்று கூறி சுவாமி சிவானந்தர் தம் குருநாதர் பாடிய இன்சுவைப்பாடலைத் தாமும் மீண்டும், மீண்டும் பாடிப் பரவசமுற்றிருந்தார்.

'உன்னில் நீ அடங்கியிரு, ஓ மனமே! அங்கும் இங்கும் ஏன் வீணில் அலைகின்றாய்? உள் முகமாய் நோக்கு — இதயத்தின் ஆழத்தில் நீ விரும்புவன அனைத்தையும் காண்பாய் அங்கே வதியும் எல்லாம் வல்ல எம்பெருமான் உன் விருப்பங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்வான். நீ இன்னமும் அறியமாட்டாய், ஓ மனமே, என்னென்ன செல்வங்கள் குவிந்து கிடக்கின்றன இறைவனின் திருமாளிகைத் திருவாசலில்!' உணர்ச்சிகள் பொங்கிப் பெருகச் சுவாமி சிவானந்தர் இவ்வாறு மீண்டும் மீண்டும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு உகந்த பாடலைத் தாமும் அனுபவித்துப் பாடலானர். பின்னர் சிறிது நேர மௌனம் தொடர்ந்தது. மெல்லிய குரலில் மஹாபுருஷர் தொடரலானர்: ''இப்பாடலின் இறுதி வரிகளில் உன்னதமான ஓர் உண்மை அடங்கியுள்ளது. ஆண்டவன் திருவாசலில் அனைத்தும் கிடைக்கும். கழிபேருவகை, பிறப்பு இறப்புக்களிலிருந்து பூரண சுதந்திரம், பிரம்மஞானம் — என்று எதைவேண்டுமாயினும் பெறலாம். ஆனல் என் குழந்தாய், நீ அதைத் தேடிப் பெறவேண்டும்; மிக்க ஆர்வத்துடன் நீ முனைந்து செயல்படவேண்டும். இந்தத் தேடுதல்தான் 'ஆன்மீகப் பயிற்சி' என்று பெயர் பெறுகிறது. கடவுள் காட்சிக்காக ஒருவன் உண்மையாகவே துடிப்பானயின், இறைவன் நிச்சயம் அவனை ஆட்கொள்வார். தமது பெருங்கருணையினல் அவர் வாசலைத் திறந்தவுடனே (உள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மீக சக்தியான) குண்டலினியானது விழிப்புற்றுவிடும். எல்லாம் அந்தர்முகமாய் நிகழ்வதுதான் என்பதை அப்போது நீ உணர்வாய். அவனுடைய கருணைத் திறத்தினல் இவ்வாறு குண்டலினி விழிப்புறுவிடில் எத்தகைய நன்மையையும் ஒருவன் பெற்றுவிடமுடியாது.''

ஓர் அன்பர் இப்பொழுது இடையில் ஒன்று கூறுவாராயினர்: ''பிரம்மானந்த மஹராஜரும் இவ்விதமே புகன்றுள்ளார். சுருண்டு கிடக்கும் குண்டலினி என்னும் ஆன்ம சக்தி மூலாதாரத்தில் விழித்தெழுந்து சுஷும்னையை நாடி மேலெழவேண்டும். அப்பொழுதுதான் பிரம்ம ஞானம் உதிக்கும் என்று பிரம்மானந்தரும் அருளியுள்ளார்.''

இதனைக் கேட்ட மஹாபுருஷர் ''அதுதான் உண்மை. இந்த விழிப்புநிலை ஏற்பட்டால் ஒழிய எத்தகைய ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படாது. இதனைக் கருத்தில் வைத்தே குருதேவரும் மகாசக்தியை நோக்கி 'விழிப்புற்றெழு! ஓ குண்டலினி தாயே, அருள்கூர்ந்து விழிப்புற்றெழு' என்று பாடிக் கதறுவார்.'' இவ்வாறு கூறிய மஹாபுருஷர் தமது இனிய காம்பீர்யம் பொருந்திய குரலில் மூன்று முறை முழுப்பாடலையும் அமுதகானமாகப் பொழிந்தார். அது ஆன்மாவுக்குக் கிளர்ச்சியூட்டுவதாக அமைந்தது. பாடல் முடிந்ததும் சிறுபொழுது சுவாமி அமைதியாக வீற்றிருந்தார். அவர் முகவிலாசத்தில் ஆன்மீக ஒளி விகசித்தது. அந்தக் கீதத்தில் பிறந்த பரவசமானது அறையெங்கும் நிறைந்தது. அறையில் பரிபூரண அமைதி நிலவியது. மஹாபுருஷர் தமது மதுரமான குரலில் ''அம்மா, அம்மா'' என்று மகாசக்தியை மெதுவாக அழைக்கலானர். பின்னர் தமது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அவர் தொடர்ந்து கூறலாயினர்: ''ஆ! ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கானத்தை இசைத்து எத்தனைமுறை நாங்கள் கேட்டிருப்போம். சில சமயம் அன்னைக்கு சாமரம் வீசிக்கொண்டே அவர் பாடுவார். அவ்வாறு பாடும்பொழுது அவர் அனுபவித்த பேரின்ப உணர்வை என்னல் வார்த்தைகளில் அளவிட்டு உரைக்க இயலாது. நாங்கள் அதில் மயங்கிக் கிடப்போம். அவரும் புறச் சூழ்நிலையை மறந்து அதில் லயித்திருப்பார். அவர் குரல்தான் எத்

தகைய மதுரம் வாய்ந்தது!' அங்கே இருந்த அனைவரும் அவர் குரலைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்குவார்கள். உலகத்துக்கெல்லாம் அன்னையாகிய அந்த மகாசக்தி இத்தகைய உத்தமமான விண்ணப்பத்துக்கு இணங்காதிருப்பாளா என்ன?''

''சுவாமி விவேகானந்தரும் ஒருமுறை 'இந்த யுகத்தில் அண்டங்களையெல்லாம் படைத்துக் காத்துத் துடைத்து அருளும் பிரம்மகுண்டலினி என்னும் மகாசக்தியானவள் ஸ்ரீராம கிருஷ்ணரின் இடைவிடாத பிரார்த்தனையினால் விழிப்புற்றெழுந்தாள்' என்றுகூறினர். ஆகவே தனி மனிதனின் குண்டலினி விழிப்புற்றெழுவதிலும் வியப்பொன்றுமில்லை அல்லவா? அதன் காரணமாகவே எங்கெங்கும் ஆன்மீகம் இன்று தழைத்தோங்குவதை நாம் காணுகின்றோம். அன்னை மகாசக்தி, அந்த ஆதார சக்தியானவள் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுடலில் புகுந்து உலக நன்மைக்காகத் திருவிளையாடல் புரிகின்ருள்.' எனவே நமக்கு யாதொரு கவலையும் இல்லை'' என்று மஹாபுருஷர் அருள்மொழிகள் புகன்றருளினர்கள்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்திரண்டாம் வருடம், இந்தியாவெங்கும் விடுதலை இயக்கம் பரவலாயிற்று. எண்ணிறந்த தேசபக்தர்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். மகாத்மா காந்தியடிகளின் அறைகூவலுக்குச் செவிமடுத்துத் தேசமே வீறு கொண்டு எழுந்தது. ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும் தங்கள் தேசத்தின்பொருட்டுத் தங்கள் உயிரையும் பணயம் வைத்தார்கள். தங்கள் தாய்நாட்டின் விடுதலை ஒன்றே அவர்களுக்கு மிக உயர்ந்த லட்சியமாக விளங்கியது.

(தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் நவம்பர் மாதம் 6ஆம் தேதி புதன்கிழமையன்று மாலை 3 மணிக்கு மேல் தீபாவளி விடுமுறைக்காக அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

நவம்பர் மாதம் 12ஆம் தேதி முதல் 17ஆம் தேதி முடிய ஆறு நாட்கள் திருச்செந்தூரில் நிகழும் கந்தர் சஷ்டி விழாவில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** நாமஜபமும், சொற்பொழிவும் செய்வார்கள். ஆறு நாட்களிலும் நாம ஜபம் காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 5 மணி வரையிலும் நிகழும்; சொற்பொழிவு காலை 9 மணி முதல் 10 மணி வரையில் நிகழும்.

1985 ஆம் ஆண்டு நவம்பர் முதல் வாரத்தில் விருதுநகர் சன்மார்க்க சங்கத்தின் சார்பில் ''விவேகானந்தர் அழைக்கிறர்'' என்கிற புஸ்தகத்திலிருந்து கேள்விகள் கொடுத்துப் பரீட்சை வைக்கப்படும். இப் பரீட்சையில் பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பு மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளலாம். மேலும் விவரம் வேண்டுவோர் சமரச சன்மார்க்க சங்கம், 158, முனிசிபல் ஆபீஸ்ரோடு, விருதுநகர் என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ஸ்ரீ விவேகானந்தரைப் பற்றிய சொற்பொழிவுகளுக்கும் சன்மார்க்கசங்கம் ஏற்பாடு செய்யும்; அவற்றிலும் மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளலாம்.

திருச்சியிலுள்ள மாணவர் இயக்கமாகிய அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் விவேகானந்தர் வாழ்க்கையையும், அவருடைய சிந்தனைகளையும் பற்றி மாணவர்களுக்கு எடுத்து உரைப்பதற்கு அஞ்சல்வழிப் பயிற்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறது. இத்திட்டததில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், கன்னியாகுமரி, சேலம், வட ஆற்காடு, சென்னை, பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் கலந்துகொள்ளலாம்.இதில் சேரவிரும்பும் மாணவர்கள் ரூ.20ம் ஆசிரியர்கள் ரூ. 30-ம் கட்டணம் செலுத்த வேண்டும். பாதித்தொகையை முன்கூட்டிச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அக்டோபர் 25ஆம் தேதிக்குள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். மேலும் விவரம் வேண்டுவோர்.

A B V P. Secretary,
20, Ranganathapuram,
Srirangam, Trichy-620 006.

என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம்	ரூ.	26-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	5-00
ஞானயோக விளக்கம்	...	15-00
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
விவேகானந்த விவரணம்	...	7-50
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
மாணவருக்கு ஒரு சொல்	...	4-50
சகோதரி நிவேதிதை	...	3-75
சுவாமி விவேகானந்தர்	...	3-50
பஜனைப்பாடல்கள்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அநுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் ஷை	...	3-00
சின்மயானந்த குரு ஷை	...	3-00
ஆனந்தமானபரம் ஷை	...	3-00
சுகவாரி ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	...	3-00
எங்கும் நிறைகின்றபொருள் ஷை	...	2-50
மலைவளர் காதலி ஷை	...	1-50
பரசிவ வணக்கம் ஷை	...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	...	2-50
ஹரிச்சந்திரன் ஷை	...	2-00
தவப்புதல்வர்கள் ஷை	...	2-00
வாலி மோட்சம் ஷை	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷை	...	1-75
நன்மக்களைப் பெறுதல்	...	1-75
விபீஷணன் சரணாகதி (நாடகம்)	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
மரணங்கள்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொரூபம்	...	1-25
*சிவதத்துவம்	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*கணபதி	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
நன்னெறிகளும் அருள் வாக்குகளும்	...	0-80
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*முருகக்கடவுள்	...	0-75
வர்ணாச்ரம தர்மம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
*விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-30
The Bhagavad Gita (12th Imp.)	...	30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	9-00
Ramakrishna lives Vedanta	...	8-00
Man Making Message	...	7-00
Siva Sahasranama Stotram	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Facets of Brahman or The Hindu Gods	..	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Thus Speaks Tayumana Swamigal	...	3-50
*Introducing The Gita	...	2-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Nursery School	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதாரத் துறையில் எந்நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களுக்கு மனதைத் திருத்தி அமைக்கும் கருத்துக்கள் வழங்கப்படுவது அவசியமாகிறது. மக்கள் மனதிலுள்ள நல்லுணர்வுகளைத் தூண்டி விடவும், மக்களைப் பக்தி வழியில் நடாத்திச் செல்வதற்கும் தர்ம சக்கரம் மக்களில் பல பேருக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறோம். தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றவளவும், தர்ம சக்கரத்தைப் படிக்கின்றவர்களுடைய தொகை அதிகரிக்கின்றளவும் மக்கள் மனதில் நல்ல திருப்பம் உண்டாகும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கும், ஆண்டுச் சந்தா முடிவுறும் சந்தாதாரர்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும் முயல்வார்களானால் அது ஒரு சிறந்த ஞானயக்ஞ கைங்கர்யமாகும். புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தி அவர்களையும் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தொடர்ந்து இதழ்களைப் பெற வசதியாக இருக்கும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் மூன்று புதிய சந்தாதாரர்களையாவது தர்ம சக்கரத்துக்குச் சேர்த்துத் தருவது என்று உறுதி செய்து கொண்டு செயல்படுவார்களானால் தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிக சுலபமாக உயர்ந்துவிடும். எவ்வளவுக்கெவ்வளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மீகத் துறையில் நீங்கள் நற்பணி செய்தவர்களாகிறீர்கள். சந்தாதாரர்களின் விலாசங்களை எழுதிச் சந்தாத் தொகையையும் அனுப்பி வைத்தால் அவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு மாதா மாதம் முறையாக அவர்களுக்குத் தர்ம சக்கரம் அனுப்பி வைக்கப்படும். தர்ம சக்கரம் சந்தா சேர்க்கும் பணியில் அதிக ஊக்கம் காட்டுமாறு சந்தாதாரர்கள் வேண்டிக் கொள்ளப் படுகிறார்கள்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. எப்பொழுது வேண்டுமென்றாலும் திரும்பவும் வாசிக்கக்கூடிய ஒரு நூலாக இது அமைந்துள்ளது. ஆகவே சந்தாதாரர்கள் ஓர் ஆண்டின் பன்னிரண்டு தர்ம சக்கர இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது நல்லதொரு புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும், மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் பைண்டு செய்த நூல் நன்கு பயன்படும். விரைவில் உங்கள் புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தக் கோருகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.